# இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
ilakku.org
SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 269 | சனி, ஜனவரி 13, 2024 | 14 பக்கங்கள்




உலகத் தமிழர்கள் அனைவருக்கும்
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை
தெரிவித்து கொள்கின்றோம்



# செங்கடல் செல்லுமா இலங்கை கடற்படை?

அகிலன்





# மாடுகள் செத்துக்கொண்டிருக்கும் போது சல்லிக்கட்டு விளையாடிய ஆளுநர்

மட்டு.நகரான்


info@ilakku.org
© 2024 இலக்கு இணையம்

# இங்கிலாந்து இளவரசி யாழ். நூலகத்திற்கு விஜயம்



இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான இராஜ்ஜிய உறவுகளின் 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதனை சிறப்பிக்கும் வகையில் பிரித்தானிய அரச குடும்பத்தைச் சேர்ந்த ரோயல்ஆன் மற்றும் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் மூன்று நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளனர்.

இந்நிலையில் வியாழக்கிழமை(11) மதியம் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் மேற்கண்ட அவர்கள் யாழ்ப்பாண நூலகத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

# செந்தில் தொண்டமானுக்கு இந்தியாவில் அமோக வரவேற்பு

இந்தியாவின் தமிழக அரசினால் நடத்தப்படும் "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில் சிறப்புரை ஆற்றுவதற்காக, தமிழக அரசினால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இந்தியா சென்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் அவர்களுக்கு, தமிழ்நாடு அரசின், சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு



வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்களால் அமோக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமிழரசு தலைவர் தெரிவு – விட்டுக் கொடுக்க மூவரும் தயாரில்லை

இலங்கைத்தமிழ் அரசுக் கட்சி தலைவர்பதவிக்காக விண்ணப்பித்த சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், சீ.யோகேஷ் வரன் ஆகிய மூவரும் வியாழக் கிழமை(11) காலை மாதி வெல சிறிதரன் விடுதியில் கூடி பேசினர்.

எவருமே வேட்பாளர் தெரிவில் இருந்து ஒருவருக்கு விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. அவரவர் பக்க நியாயங்களை கதைத்தனர்.

# பொருளாதாரத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் இந்தியாவின் மணிப்பூர் இனக் கலவரம்

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் இடம்பெற்றுவரும் இனக் கலவரம் அங்குள்ள மக்களின் பொருளாதாரத்தில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு பல இன மக்களும் பல பூர்வீக குடி மக்களும் வாழந்து வருகின்றனர். அதிகளவில் இந்துக்களைக் கொண்ட மெறி இனமக்களும், கிறிஸ்த்தவர்களை அதிகம் கொண்ட நாகா மற்றும் குகி இன மக்களும் அங்கு வாழ்கின்றனர்.



2.3 மில்லியன்மக்கள்தொகையில் மெறி இனமக்கள் 51 விகிதமாகும். ஆனால் அவர்கள் 10 விகிதமான நிலப்பகுதிகளில் தான் வாழ்கின்றனர். ஏனைய இனமக்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மாலைதீவுடன் மூலோபாய உடன்பாட்டை சீனா மேற்கொள்ளும் – சீன அதிபர்



மாலைதீவின் அபிவிருத்திப் பணிகளுக்கு சீனா முன்னுரிமை வழங்குவதுடன், மாலைதீவுடன் மூலோபாய உடன்பாடுகளை மேற்கொண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்படுத்தப்படும் என சீனா அதிபர் கடந்த புதன் கிழமை(10) தெரிவித்துள்ளார்.

மாலைதீவில் புதிதாக பதவியேற்ற அதிபர் மொஹமட் மொஸ்சு இந்த வாரம் சீனாவுக்கு முதல் முதலாக மேற்கொண்ட பயணத்தின்போதே சீனா அதிபர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய அதிபர் பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்கும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஹதீஸ் படையினர் மேற்கொண்ட மிகப்பெரும் தாக்குதல்



ஏமனின் ஹதீஸ் படையினர் நேற்று மேற்கொண்ட கடுமையான தாக்குதல்களை அமெரிக்க மற்றும் பிரித்தானியாவின் கடற்படைக் கப்பல்கள் கூட்டாக முறியடித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். செங்கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த கப்பல்களை நோக்கி இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகம் தெரிவித்துள்ளது.

18 தற்கொலைத் தாக்குதல் விமானங்கள், 2 கப்பல்களைத்தாக்கும் குரூஸ் ஏவுகணைகள் மற்றும் ஒரு கப்பல்களைத் தாக்கும் பலஸ்ரிக் ஏவுகணை என்பன ஏவப்பட்டதாகவும், ஏவுகணைகள் ஏவப்பட்ட சமயம் அந்த பகுதியில் 50 கப்பல்கள் சென்றுகொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் எசன்கோவர் விமானந்தாங்கி கப்பல் மற்றும் பிரித்தானியாவின் டயமன்ட் என்ற நாசகாரிக் கப்பலும் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.


இந்த சம்பவத்தில் காயங்களோ அல்லது கப்பல்களுக்கு சேதங்களோ ஏற்படவில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ள போதும், ஒரு கப்பல் சேதமடைந்துள்ளதாக பிரித்தானியா தகவல்கள் தெரிவித்துள்ளன. கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் நாளுக்கு பின்னர் இடம்பெற்ற 26 ஆவது தாக்குதல் இதுவாகும்.

உலகின் வர்த்தகத்தில் 10 விகிதமாக எரிபொருட்கள் செங்கடலின் வழியாகவே செல்கின்றன. அது 1 டிரில்லியன் டொலர் வர்த்தகமாகும்.

# தாய்வான் போர் 10 டிரில்லியன் டொலர்கள் இழப்பை ஏற்படுத்தும்

தாய்வான் தொடர்பான அமெரிக்காவினதும், சீனாவினதும் போர் உலகின் பொருளாதாரத்தில் 10.2 விகித வீழ்ச்சியை ஏற்படுத்தும் இது 10 டிரில்லியன் டொலர்கள் என புளும்பேர்க் ஊடகம் தெரிவித்துள்ளது.

எனவே இந்த போரை தவிர்ப்பதற்கு எல்லா தரப்பினரும் முன்வரவேண்டும். 1949 ஆம் ஆண்டு உள்நாட்டு போர் முடிவடைந்த பின்னர் தாய்வான் சுயாட்சி அதிகாரம் கொண்ட மாநிலமாக உள்ளது. அது அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொண்டுள்ளது. எனவே சீனா அதனை தன்னுடன் இணைக்க




விரும்பினால் அதனை அமெரிக்கா எதிர்க்கும்.

அதனை சமாதான வழிகளில் மேற்கொள்ள சீனா முயல்கின்றது. ஆனால் தாய்வான் தன்னிட்சையாக சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தினால் அதனை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஹமாஸ் – இஸ்ரேல் மோதல் 525 இராணுவத்தினர் பலி

கடந்தவருடம்ஒக்டேடபர்7ஆம் நாள் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தரைத்தாக்குதல்களில் இதுவரையில் தமது தரப்பில் 525 படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 5 பேர் கேணல் தர அதிகாரிகள் எனவும் இஸ்ரேலிய தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த வாரம் காசா பகுதியில் இடம்பெற்ற கார்குண்டு வெடிப்பில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், 30 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

அமே சமயம், இஸ்ரேலிய அரசு மேற்கொண்டு வரும் வான் மற்றும் எறிகணைத்தாக்குதல்களால் இதுவரையில் காசா பகுதியில் 23,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 60,000 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 10,000 இற்கு மேற்பட்டவர்கள் சிறுவர்கள். இந்த தாக்குதல்களில் 115 பாலஸ்தீன ஊடகவியலாளர்களும் கடந்த 94 நாட்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனிடையே லெபனான் பகுதிகள் மீது இஸ்ரேல் தொடர்ந்து மேற் கொண்டுவரும் வான் தாக்குதல்களில் பலர் கொல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தவாரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பினரின் படையணி ஒன்றின் பிரதி கட்டளை அதிகாரி ஒருவர் உட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

## தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட அவர்களின் தலைநகரம்

இலங்கை மீதான இந்தியாவின் ஆதிக்கம் மெல்ல மெல்ல செயற்திறன் மிக்க நிலைக்கு வந்துள்ளது. திருமலையை குறிவைத்து அமெரிக்கா கொண்டுவந்து மிலேனியம்சலஞ்என்றதிட்டத்தைமுறியடித்தஇந்தியா அதன் பின்னர் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் கொண்டுவந்த சீனாவுடனான அபிவிருத்தித் திட்டத்தையும் முறியடித்து வரலாற்றில் முதல் முறையாக கிழக்கு மாகாணத்திற்கு தமிழ் ஆளுனர் ஒருவரை நியமித்திருந்தது.



மலையகத்தைச் சேர்ந்த அரசியல்வாதியான செந்தில் தொன்டமானை நியமித்ததுடன் மட்டும் நிற்காது, அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தராமனும் தமிழ் அரசியல் கட்சிகளை விட செந்திலுக்கே முன்னுரிமை வழங்கி யிருந்தார்.

1987 ஆம் ஆண்டு இந்தியா கொண்டுவந்த மாகாணசாபையின் ஏனைய சரத்துக்களை இயக்க மற்றதாக்கி ஆளுணர் என்ற பதவியை மட்டும் செயற் படவைத்து இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கையின் அடுத்த கட்டம் இந்த வருடத்தின் ஆரம்பத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இந்த வருடம் இலங்கையில் தேர்தல் என்பதும் அது முனைப்புப்பெறக் காரணம்.

தைப்பொங்கலை முன்னிட்டு தமிழ் மரபுரிமை வாரம் என புலம்பெயர் தமிழ் மக்கள் புலம்பெயர் நாடுகளில் விழாக்களை எடுக்க திருமலையை சத்தமின்றி கைப்பற்றி விழா எடுத்துள்ளது இந்தியா.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக 1008 பொங்கல் பானையுடன்,1500 பரத நாட்டிய கலைஞர் களுடன், 500 கோலங்களுடன் பொங்கலை வரவேற்கும் முகமாக மாபெரும் பொங்கல் திருவிழா கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை திருகோணமலை மகேசர் திறந்தவெளி விளையாட்டரங்கில் இடம்பெற்றுள்ளது.

பொங்கல் விழாவை முன்னிட்டு சனிக்கிழமை இலங்கை வரலாற்றில் முதல் முறையாக ஜல்லிக்கட்டு போட்டியை கிழக்கு ஆளுநர் நடத்தியிருந்தார்.

தமிழருடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழ் நாட்டை தாண்டி வேறு ஒரு நாட்டில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டட்டுக் ஸ்ரீ முருகன் மற்றும் நடிகர் நந்தா ஆகியோரும்.

சிறப்பு விருந்தினர்களாக ஜல்லிக்கட்டு பாது காப்பு நல சங்க தலைவர் ஒண்டிராஜ், செயலாளர் ராஜா ஆகியோர் கலந்துகொண்டதுடன் இந்தியா உட்பட பல நாடுகளை சேர்ந்த விசேட அழைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நல சங்கத்த தின் வழிகாட்டலில் ஜல்லிக்கட்டு இடம்பெற்றது.

அதேசமயம் கிண்ணியா பாலத்தருகில் மாபெரும் பாரம்பரிய படகோட்டப் போட்டி சனிக்கிழமை(6) மாலை இடம் பெற்றது. கிழக்கு மாகாண ஆளுனர் செயலகம் ஏற்பாடு செய்த குறித்த போட்டியை கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

கிண்ணியா துறையடி கடற்பகுதியில் இருந்து கிண்ணியா பூங்கா வரை கடல் வழியாக இப் பட கோட்டப் போட்டி பாரம்பரிய விளையாட்டின் ஒரு பகுதியாக படகோட்டப்போட்டி இடம் பெற்றமை வரவேற்கத்தக்க ஒன்றாக காணப்படுகிறது. தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு இப் படகு போட்டி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## பொங்கல் நாளில் ஈழமக்கள் தேசமாகப் பொங்கியெழுந்து இழந்த இறைமையை மீள்விக்க உறுதிபூண வாழ்த்துகள் !

'இலக்கு' ஆசிரிய பீடம் தமிழர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவிக்கும் அதே நேரத்தில் குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு 2024 இல் அவர்கள் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொடர்ந்து வரும் தொன்மையும் தொடர்ச்சியுமுள்ள இறைமையின் அடிப்படையில் அவர்களுக்குள்ள தன்னாட்சி உரிமையைப் (Self -determination) பயன்படுத்தி அவர்களுக்கான தன்னாட்சியை (Autonomy) மீள் உறுதிப்படுத்தி பாதுகாப்பான அமைதியான வாழ்வையும் வளர்ச்சிகளையும் தரவல்ல சனநாயக ஆட்சியை மீள்விக்க உறுதிபூண பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது

ஈழத்தமிழ் மக்கள் பொங்கல் பெருவிழாவைக் கொண்டாடி புதிய வாழ்வுக்கான உள எழுச்சியைப் பெறுகின்ற மகிழ்ச்சியான நேரத்தில் இலங்கையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம் என்பன ஈழத்தமிழ் மக்களின் இறைமையை மேலும் ஆக்கிரமிப்பதற்கான சட்டத் தகுதியைச் சிங்களப் பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்கு வழங்கும் வகையில் இன்றைய சிறிலங்கா அரசாங்கத்தால் சட்டவாக்கத்துக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் வழி இலங்கைக்குள் மட்டுமல்ல உலகில் எங்கு வேண்டுமானாலும் சிறிலங்கா அரசாங்கம் ஈழத்தமிழ் மக்களை அவர்களிள் தாயக மக்களின் நல்வாழ்வுச் செயலுக்காகத் தொடர்பு கொண்டால் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தக் கூடிய அதிகாரத்தைச் சிறிலங்கா அரசாங்கத்திற்கு இந்தச் சட்டங்கள் அளிக்கின்றன. எனவே இச்சட்டங்கள் உலகின் பெரும்பாலான நாடுகளில் அந்நாடுகளின் குடிகளாக அரசியல் புகலிடத்தின் மூலம் பரிணாமம் பெற்றுள்ள ஈழத்தைப் பூர்வீகத் தாயகமாகக் கொண்ட ஈழத்தமிழர்களின் தங்கள் தாயக மக்களுக்கான நீதிக்கான குரலைக் கட்டுப்படுத்தவும், தாயக மக்களுக்கான நாளாந்த வாழ்வியிலின் வளர்ச்சிக்கான நிதி உதவிகளை மட்டுப்படுத்தவும் இந்தச் சட்டங்கள் சிறிலங்காவுக்கு உதவும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. மேலும் அடிப்படையில் இச்சட்டங்கள் ஈழத்தமிழர்களை அவர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் அவர்களின் வரலாற்றுத் தாயகத்தில், அவர்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறைமைக்குள் இலங்கை என்ற செயற்கை அரசாங்கத்துள் இணைக்கப்பட்டதால் தங்களின் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி வாழ முடியாது தொடரும் 76 ஆண்டுகாலத் தீர்க்கப்படாத காலனித்துவப் பிரச்சினை நிலையிலிருந்து தங்களை விடுவித்து, தங்களின் யாராலும் பறிக்க இயலாத தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தித் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான, அனைத்துலக சட்டங்களின் நடைமுறைப்படுத்தல்களைப் பெறுவதற்கு உலகத் தமிழர்களாக உள்ள ஈழத்தமிழர்கள் தங்களின் அறிவையும் ஆற்றலையும் அளிப்பதைத் தடைசெய்வதே இன்றைய சிறிலங்கா அரசாங்கத்தின் இச்சட்டங்களின் தலையாய நோக்காக உள்ளது.

இந்நேரத்தில் பிரித்தானியாவின் இளவரசி மாண்பமை ஆன் அவர்களும் அவரின் கணவர் பிரித்தானியக் கடற்படையின் துணைத்தலைவர் சேர். ரிமோதி லோரன்ஸ் அவர்களும் பிரித்தானியாவுடன் சிறிலங்கா ராஜதந்திர உறவைத் தொடங்கியதன் 75 வது ஆண்டைக் கொண்டாடும் நோக்கில் 10.01.2024 இல் கொழும்பு சென்று சிறிலங்கா அரசத்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துள்ளனர். இந்த சந்திப்பில் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா மற்றும் சிறிலங்காவின் பாதுகாப்புப் பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திரசில்வா வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தனா சுகாதார இராஜங்க அமைச்சர் சீதா அரம்பேபொல ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கா ஆகியோர் ஒன்றிணைந்து ஒரே சிங்கள சமூகமாக மாண்பை பிரித்தானிய இளவரசியுடன் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இது சிங்களவர்களின் பொதுவெளியில் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்காக இணையும் பலத்தின் வெளிப்பாடாகியுள்ளது. இந்நிகழ்வு பிரித்தானிய அரச குடும்பத்தின் 2024ம் ஆண்டுக்கான முதலாவது உத்தியோக பூர்வ வெளிநாட்டுப் பயணமாகவும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. இது 1983 யூலை முதல் சிறிலங்காவில் இனங்காணக்கூடிய அச்சத்தால் வாழ இயலாது இன்று வரை ஐக்கிய இராச்சியத்தில் அரசியல் புகலிடம் பெற்றும் மற்றும் கல்வி தொழில் வர்த்தக தேவைகளுக்காகவும் வாழ்ந்து பிரித்தானியக் குடிகளாக ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்து வரும் 500000 ஈழத்தைத் தங்கள் பூர்வீகத் தாயகமாகக் கொண்ட ஈழத்தமிழ் தேசியத்தவர்கள் தங்களுடைய பிரித்தானிய அரசுக்கும் தங்களுடைய மாட்சிமைக்குரிய மன்னர் 3வது சார்ள்ஸ் அவர்களுக்கும் தங்களுடைய தாயகத்தின் உண்மை வரலாற்றினைத் தெளிவாக எடுத்து விளக்கி மாண்பமை மன்னரின் பிரித்தானிய அரசின் முழுஅளவிலான ஆதரவை பாதிக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களுக்கு பெற இயலாதிருக்கும் கையாலாகத்தன்மையை உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது.

கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களால் கனடிய அரசின் மூலம் முன்னெடுத்த ஈழத்தமிழர்களின் வரலாற்று உண்மைகளுக்குச் சாதகமான பல விடயங்களில் ஒன்றினைக் கூட ஐக்கிய இராச்சியத்தில் வாழும் ஈழத்தமிழர்களால் முன்னெடுக்க முடியாமல் போனமைக்கான காரணங்களை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய நேரமிது. சுருக்கமாகச் சொன்னால் ஐக்கிய இராச்சியத்தில் பலராக ஈழமக்களுக்குப் பணி செய்பவர்கள் ஒரணியில் ஒருங்கிணைப்புப் பெற தங்களின் ஆணவப்போக்கால் மறுத்துப் பொதுவெளியில் ஒரு குரலில் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினையையும் ஈழமக்கள் இனஅழிப்பாலும் இனத்துடைப்பாலும் பண்பாட்டு இனஅழிப்பாலும் பிரித்தானிய காலனித்துவ கால முடிக்குரிய அரசின் தவறான முடிவுகாளல் 76 ஆண்டுகளாக அனுபவிக்கும் மனித அவலங்களையும் தங்கள் மாண்பமை மன்னருக்கும் தங்களின் பிரித்தானிய அரசுக்கும் எடுத்துரைக்க இயலாத நிலைதான், இன்றுவரை ஈழத்தமிழர்களின் மேலான சிறிலங்காவின் இனஅழிப்பு அரசியல் தொடர்கதையாகத் தொடர்வதற்கு மூலகாரணம் என்பது இலக்கின் திடமான கருத்து. எனவே கூட்டத்தில் கூடி நின்று கூவிக் களிப்பாரடி கிளியே வாய்ச்சொல்லில் வீரரடி என்ற பாரதியின் நெஞ்சு பொறுக்காது சொன்ன அதே பாடல் வரிகளையே நெஞ்சு பொறுக்காது இலக்கும் மீளவும் பதிவு செய்கிறது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தன்னாட்சிக்கான உரிமைக்குரலாக 04.02. 2024 அன்று சிறிலங்காத் தூதுவராலய முன்றலிலிருந்து பாராளுமன்ற முன்றல் வரையான மாண்பமை பிரித்தானிய மன்னரை நோக்கிய ஈழத்தமிழர் பேரணியாவது பிரித்தானியத் தமிழரை ஒருங்கிணைக்க இலக்கு வாழ்த்துகிறது.

**ஆசிரியர்**



# செங்கடல் செல்லுமா இலங்கை கடற்படை?

அகிலன்

செங்கடலில் இலங்கை கடற்படைக் கப்பலை அனுப்பினால் பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை 250 மில்லியன் ரூபாய் செலவாகும் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். இலங்கைப் பொருளாதாரத்தின் தற்போதைய மந்தநிலையின் பின்னணியில் இது உண்மையில் அதிகம்தான். ஆனால், உலக வர்த்தகத்தைச் சார்ந்துள்ள இலங்கை, அதனைப் பாதிக்கும் வகையில் செயற்படும் ஒரு குழுவின் அடாவடித்தனத்தைக் கண்டும் காணாமலும் இருக்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கு நியாயம் கற்பிக்க முனைகிறார்.



ஜனாதிபதி என்னத்தைச் சொன்னாலும், செங்கடலுக்கு இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் அனுப்பிவைக்கப்படுமா என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால், ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்பு, தமது கடற்படை தயாராக இருப்பதாக கடற்படைப் பேச்சாளர் அறிவித்திருப்பதும், இலங்கைக் கடற் படைக் கப்பல் ஒன்று செங்கடல் பகுதிக்குச் செல்வதற்கான சாத்தியம் இருப்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது.

### பொருளாதாரம் மேலும் பாதிப்பு

செங்கடலில் கப்பல் போக்குவரத்து தடைபடுவதால் இலங்கை பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால், பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் நிலையை இது மேலும் மோசமாக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே செங்கடலின் பாதுகாப்புக்காக தமது பங்களிப்பாக கப்பல் ஒன்றை அனுப்பிவைக்கும் முடிவை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதியில் பாதிக்கும்



மேற்பட்டவை செங்கடல் வழியாகவே ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றன. இது தடைபட்டால், இலங்கையின் பொருளாதாரத்தில் அது தீவிரமான ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால்தான், கப்பல் அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

யேமனை தளமாகக் கொண்ட ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்கு எதிராக உலக கப்பல் போக்குவரத்தை பாதுகாக்கும் ஒரு சர்வதேச படையின் ஒரு பகுதியாக இலங்கை கடற்படை கப்பல் ஒன்று செங்கடலில் நிலைநிறுத்தப்படும் என்று கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

### சர்ச்சையை ஏற்படுத்திய ரணிலின் அறிவிப்பு

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. நாட்டு மக்கள் பசியாலும், பட்டினியாலும் வாடும் நிலையில் பல கோடிகளைச் செலவிட்டு இவ்வாறு கப்பல்களை செங்கடலுக்கு அனுப்பத்தான் வேண்டுமா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இஸ்ரேலியர்களால் இரவும் பகலும் குண்டு வீச்சுக்கு ஆளாகி ஆயிரக்கணக்கில் கொல்லப்படும் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாகவே செங்கடல் பகுதியில் மேற்கு நாட்டு கப்பல்களை இலக்கு வைத்து ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை நடத்துவதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் என்ன காரணத்திற்காக இருந்தாலும், ஹூதிகள் இதனைத் தொடர அனுமதிக்கக் கூடாது என்பதில் மேற்கு நாடுகள் உறுதியாகவுள்ளன. இதற்கான ஒரு கூட்டணியையும் அமெரிக்க தலைமையிலான இந்த நாடுகள் அமைத்துள்ளன.

இந்த மேற்கு நாடுகளுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்த வேண்டியவராக ரணில் இருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. முக்கியமாக – மேற்கு நாடுகளுக்கு ஆதரவை இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் வழங்குவதன் மூலம், இலங்கை தற்போது எதிர்கொள்ளும் கடன் பிரச்சினைகளிலிருந்து விடுபட, மேற்கு நாடுகள் உதவும் என்பது முதலாவது. மனித உரிமைகள் போன்ற வழமையாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலிருந்து அமெரிக்கா தலைமையிலான நாடுகள் இலங்கையைப் பாதுகாக்கும் என்பது இரண்டாவது. மேற்கு நாடுகள் வழங்கக்கூடிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வது மூன்றாவது.

இந்தப் பின்னணியில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செங்கடலுக்கு இலங்கை கடற்படையின் கப்பல் செல்லும் என்று அறிவித்திருக்கின்றார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு திடீரென வெளியான ஒன்றல்ல. அரசியல் கள நிலைமைகளை நன்கு ஆராய்ந்த பின்னர் வெளிவந்த அறிவிப்புத்தான் இது. இதனைவிட, செங்கடல் பிராந்தியத்தில் இலங்கையும் இறங்குவதால், கள நிலைமைகளில் மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

### செங்கடலின் முக்கியத்துவம்

உண்மையில், சர்வதேச வர்த்தகத்தில் 15 வீதமானவையும், எண்ணெய் வர்த்தகத்தில் 12 வீதமானவையும் செங்கடல் ஊடாகவே செல்கின்றது. மற்றும் எரிவாயு வர்த்தகத்தில் 8 வீதமும் செங்கடல் வழியாக செல்கிறது. ஒரு நாளைக்கு 8.8 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் மற்றும் 4.1 மில்லியன் கன அடி எரிவாயு இவ்வாறு பயணிக்கிறது.

அமெரிக்காவால் செங்கடலில் 20 நாடுகளின் கூட்டணியில் சேர இந்தியா ஏற்கனவே கடற்படைக் கப்பல்களை அனுப்பியுள்ளது. MV Chem Pluto என்ற வணிகக் கப்பலான MV Chem Pluto, 21 இந்திய பணியாளர்களுடன் சென்றுள்ளது. ஐஎன்எஸ் கொச்சி மற்றும் ஐஎன்எஸ் கொல்கத்தா மற்றும் நீண்ட தூர கடல்சார் உளவுத்துறை P8I விமானங்களை அது நிலைநிறுத்தியுள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை பெரிதும் நம்பியிருக்கும் நாடு என்ற வகையில், இந்தியாவின் முன்மாதிரியைப் பின்பற்ற இலங்கை தீர்மானித்துள்ளது. இலங்கையின் நாளிதழ் ஒன்று கடற்படை பேச்சாளரை மேற்கோள்காட்டி, கடற்படை அத்தகைய பணியமர்த்தலின் தளவாடங்களை ஆய்வு செய்து வருவதாகவும், ஆய்வுக்குப் பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

### இலங்கையின் கடற்படை கப்பல்

“இந்தவகையானவரிசைப்படுத்தலுக்குஎங்களுக்கு



ஒரு வலுவான ஆயுதம் தேவை. செங்கடல் பகுதியில் உள்ள அச்சுறுத்தல்களை பகுப்பாய்வு செய்வது முக்கியம். எங்கள் கப்பலின் பாதுகாப்பை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பண்பாட்டு மீட்டுணர்வு மூலம் இறைமை மீட்போம்

— முத்த ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

உலகில் மனிதன் உயிர்வாழ உழைக்கும் அனைவருக்கும் சிறப்பாகத் தைப்பொங்கல் பெருவிழாவை தமிழினத்தின் பண்பாட்டு அடையாளப் பெருவிழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தமிழர்கள் அனைவருக்கும் 2024ம் ஆண்டுக்கான இனிய தைப்பொங்கல் நன்னாள் வாழ்த்துகள்.



தைப்பொங்கல் விழா, மனித உழைப்புக்கான நன்றிப் பெருவிழா. தமிழர் பண்பாட்டு வெளிப்பாட்டு விழா. உண்ணும் உணவு மனிதக் கூட்டு உழைப்பின் விளைவு. இந்த விளைவுக்கு இரத்தவேர்வை நிலத்தில் சிந்தி உழைக்கும் உழைப்பாளரைப் பேணலிலும் இந்த விளைவுக்கு உதவும் இயற்கையை அதன் நிலையில் பேணலிலுமே உழைப்பின் விளைச்சல் உச்சமடையும். எனவே நிலத்தையும் நீரையும் பேணலும் உழைக்கும் உழைப்பாளரின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி உடல்நலம் உளநலம் பேணலுமே மனிதர்கள் உணவுத் தட்டுப்பாடின்றி வையத்துள் வாழ்வாங்குவாழ உதவும். எனவே இந்த உயிர் காக்கும் உணவு வழங்கல் பண்பாட்டை உழைப்பால் உறுதிப்படுத்தி நிலம்படு பொருளாதாரத்தையும் கடல்படு பொருளாதாரத்தையும் வேளாண்மை செய்து தன்னாட்சியை வெளிப்படுத்தி ஆட்சிப்படுத்தும் உழவர் திருநாள் தமிழரின் தைப்பொங்கல் பண்பாட்டுப் பெருவிழா.

இந்த நிலத்தின் மீதும் கடலின் மீதான உழைக்கும் மக்களின் இந்த உரிமைதான் மக்களுக்கான நாட்டின் மேலான இறைமை என அழைக்கப்படுகிறது. இவ்வாறு மக்கள் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களின் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிப்பதற்கான அவர்களில் இருந்து பிரிக்க முடியாத மனித உரிமைதான் தன்னாட்சி உரிமை. இந்த ஒவ்வொரு மனிதனினதும் தன்னாட்சி உரிமையை ஒன்றிணைத்து எல்லா மனிதர்க்குமான தன்னாட்சி உரிமையாக அதனை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தும் கலைதான் ஆட்சிக்கலை. இந்த ஆட்சிக்கலை சிறப்பாக அமைவதற்காக ஒவ்வொருவரும் தன்னை ஆளும் உரிமையை முன்னிலைப்படுத்தும் அரசுக்கு அனுமதிப்பது தான் உள்ளக தன்னாட்சி உரிமை.

இந்த உள்ளக தன்னாட்சி உரிமையை தன் நாட்டில் தான் ஆள உருவாக்கிய ஆட்சியாளர் அனுமதிக்க மறுத்தால் உலகின் குடி என்ற வகையில் உலக நாடுகளதும் அமைப்புக்களதும் உதவியைக் கோரலுக்கான அடிப்படை மனித உரிமையே வெளியகத் தன்னாட்சி உரிமை. எனவே தமிழரின் தைப்பொங்கல் பெருவிழா வெறுமனே சூரியனுக்குப் பொங்கலிட்டு ஒக்கலித்து அகமகிழ்ந்து பொங்கலோ பொங்கல் என உண்டு களிக்கும் விழாவல்ல. மாறாக சமத்துவ சகோதரத்துவ சுதந்திரத்துடன் உழைப்பின் மக்களும் உழைப்புக்கு மூலதனமிட்ட மக்களும் உழைப்பால் பயன்பெறும் மக்களும் ஒன்று கூடி இயற்கையைப் பேணினாலே எந்த உழைப்பும் அதற்கு உரியப் பலனைத் தரும் என்பதைச் சுட்டும்



சூரியப்பொங்கலிட்டு முதல்நாளும் உழைப்புக்கு உதவும் உயிர்களையும் கொண்டாடும் மாட்டுப் பொங்கலாக மறுநாளும் பறவைகளுக்கும் உயிர்களுக்கும் கூட உணவைப் பகிர்ந்து அளித்து எல்லாரும் எல்லாமும் பெறச் செய்யும் சமபகிர்வே பாதுகாப்பான அமைதியான வாழ்வின் அச்சாணியென மூன்றாம் நாள் காணும் பொங்கலும் கண்டது தமிழ்ப்பண்பாடு. இயற்கையை அதுவும் குறிப்பாக நிலத்தை நீர்வளத்தைப் பேணல், உழைக்கும் மனிதசக்தியை ஒன்றிணைத்தல், உழைப்புக்கான கருவிகளைக் கண்டுணர்ந்து பேணல் இவ்வாறு உலகம் உய்ய உழைப்பதில் இணைவதில் இணைப்பதில் மகிழ்தல் இதுதான் தமிழரின் பொங்கல் திருநாளை அவர்களின் பண்பாட்டின் விழாவாகவும் தமிழினத்தின் அடையாளப் பெருவிழாவாகவும் உலகில் முன்னிறுத்துகிறது.

இன்று உலகெங்கும் ஈழத்தமிழர்கள் உலகத்தமிழர்களாகப் பரிணாமம் பெற்றிட்ட நிலையில் உலகத் தலைவர்கள் அனைத்து மதத்தலைவர்கள் தைப்பொங்கலை மதித்துப் போற்றி பொங்கல் செய்தி விடுக்கும் வளர்ச்சி காரணமாக தைப்பொங்கல் உலகின் பெருவிழா வாக ஈழத்தமிழர்களின் இரத்தத்தாலும் உயிராலும் உறுதிப்படுத்தப் பெற்றுள்ளமை சமகாலப் பொங்கல் வரலாறு.

இந்த உண்மைகளை உணர்த்தும் வகையில் சங்கத் தமிழ்ப் புலவர் குடபுலவியனார் அக்காலத்துப் பாண்டிய அரசர் பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கி

*வேந்தே! நீ நீடு வாழ்க!*
*செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்*
*ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி*
*ஒரு நீ ஆகல் வேண்டினும் - சிறந்த*
*நல்லிசை நிறுத்தல் வேண்டினும் - மற்று அதன்*
*தகுதி கேள்இனி! மிகுதியாள*

என நாட்டின செல்வப் பெருக்குக்கும் பேரரசாக் கத்திற்கும் சிறந்த ஆட்சியென்ற புகழைப் பெறுவதற்கும் என்ன தகுதியெனக் கேள் இது மிகுதியான ஆளும் வலிமை எல்லாம் தரும் என விளித்து

*நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*உணவெனப்படுவது நிலத்தொடு நீரே!*
*நீரும் நிலனும் புணரியோர் கண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசினோரே!*

என்பதனால் நீரின்றி எந்த உடலும் வாழாது – உணவு தருபவர் தான் உயிர் கொடுப்பவர் - உணவினாலே வாழும் தன்மையானது உடம்பு – உணவு என்பது நிலமும் நீரும் இணைந்த கலவையே என அறிவார்ந்த நிலையில் உணவு உற்பத்தியினதும் வழங்கலினதும் மனிதத் தேவையை வலியுறுத்தி, உணவு உற்பத்திக்கு நிலத்திலும் கடலிலும் உழைப்பவரே மனித இனம் வாழ்வதற்கான உயிர்த்தன்மையை உறுதி செய்கின்றார்கள். அந்த நிலத்துக்குத் தவறாது நீர் கிடைக்கச் செய்பவரே வாழும் உடம்பையும் உயிரையும் படைக்கின்றார். இவ்வாறு தன்னலம் கருதாது மன்னுயிர் நலம் கருதும் உழைப்பாளரில்லையேல் உலகே இல்லையென்ற உண்மையைக் குடபுலவியனார் மிகத் தெளிவாகக் கூறுகின்றார். கூடவே

*வித்து வான்நோக்கும் புன்புலம் கண்ணகன்*
*வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்*
*இறைவன் தாட்கு உதவாதே*

என விதைக்கப்பட்டு வானோக்கி நீருக்காகக் கிடக்கும் வயல் நிலங்கள் நீரில்லையேல் அரசனின் பசிப்பிணி போக்கும் பணிக்கு உதவமாட்டாதே என ஆட்சியாளர்கள் நீர்முகாமைத்துவத்தைச்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# நாடி பிடித்துப் பார்க்கவே ரணில் வடக்குக்கு வந்தார்

பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம்



**2024 தேர்தல் ஆண்டாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அரசியலிலும் முக்கியமான நகர்வுகள் வருடம் பிறந்த உடனடியாகவே ஆரம்பமாகிவிட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமாகாணத்துக்கு மேற்கொண்ட விஜயம், அங்கு அவர் தெரிவித்த கருத்துக்கள், சந்திப்புக்கள் என்பன அரசியலில் இந்த வாரம் முக்கியமான பேசு பொருளாகியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் ரணிலின் விஜயம், ஜனாதிபதித் தேர்தலுக்கான உபாயங்கள், தமிழ்த் தரப்பினரின் நிலை என்பன போன்ற விடயங்களையிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் உயிரோடைத் தமிழின் தாயகக்களம் நிகழ்ச்சியில் தெரிவித்த கருத்துக்களின் முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காகத் தருகின்றோம்.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விஜயம் தேர்தலை இலக்காகக் கொண்டதாகத்தான் நீங்கள் பார்க்கின்றீர்களா?**

வெளிப்படையாகப் பார்க்கும்போது அவ் வாறுதான் தோன்றுகின்றது. இந்த வருடம் தேர்தல் ஆண்டாக இருக்கும் எனக்கூறப்படுவதன் அடிப்படையிலும், அது தொடர்பான உரையாடல்கள் தென்னிலங்கையில் இடம்பெறுகின்ற நிலைமையிலும், இது தேர்தலுக்கான உத்தியாகவே தெரிகின்றது. அதேவேளையில், இங்கு இடம் பெற்ற உரையாடல்களைப் பார்க்கின்ற போது, தேர்தலுக்கான அணுகுமுறைகள் இங்கு பிரதிபலிக்கின்றதா என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

அதேவேளையில் ரணில் விக்கிரமசிங்க தொடர்பாக ஒரு நீண்ட அனுபவத்தையும் வடக்கு கிழக்கு தமிழர்கள் கொண்டிருக்கின்றார்கள். அதனால், இது எவ்வாறு தேர்தலுக்கான வாக்குகளாக அமையும் என்ற கேள்விக்குள்ளாலும் பார்க்க வேண்டிய ஒரு தேவைப்பாடு இருக்கின்றது. வெளிப்படையாகப் பார்க்கும் போது இது தேர்தலை இலக்காகக் கொண்ட ஒரு நகர்வாகப் பார்க்கப்பட்டாலும், இது தேர்தலுக்கான ஒரு அணுகுமுறையா என்ற கேள்வி இலங்கையின் அரசியல் பாரம்பரியத்திலிருந்து எழுப்பப்படக் கூடிய ஒன்றாகவே இருக்கின்றது.

**ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் மாதத்தில்தான் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் சுமார் ஒன்பது மாத காலம் இருக்கும் நிலையில், இப்போதே களத்தில் இறங்கி இவ்வாறான காய்நகர்த்தல்களை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டிய தேவை என்ன இருக்கின்றது?**

இதில் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது. தமிழ் மக்கள் எவ்வாறான எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாடி பிடித்துப் பார்ப்பதற்கான அணுகுமுறையாகக்கூட இதனைப் பார்க்கமுடியும். சந்திப்புக்களையும், சந்திப்புக்களுக்குப் பின்னால் இருந்த நகர்வுகளையும் பார்க்கும் போது அவ்வாறுதான் தெரிகின்றது. தென்பகுதியில் காணப்படும் எதிர்ப்புக்கள், அதிகளவு வேட்பாளர்கள் களமிறங்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு என்பவற்றுடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் அதிகளவுக்கு வாக்களித்திருந்தமை போன்ற காரணங்கள் இப்போதே தமிழ் மக்களை நோக்கி ரணில் வருவதற்குக் காரணமாக இருக்கலாம்.

இன்னொரு வகையில் வடபகுதி மக்கள் எதிர்ப்புக்களை அதிகளவுக்கு வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில், அவ்வாறான எதிர்ப்புக்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த சூழ்நிலையையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக தேர்தலுக்கானது போன்ற பிரசார உத்திகள், சலுகைகள் குறித்த அறிவிப்புக்கள் போன்றன முதன்மைப்படுத்தப்படாத ஒரு விஜயமாகத்தான் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு விஜயத்தை பார்க்கக்கூடியதாக இருந்தது.



**யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின்போது, அரசியல் தீர்வு குறித்தோ, அல்லது தமிழ்த் தரப்பினரால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாகவே தான் அதிகளவுக்கு கவனம் செலுத்தவில்லை என்றும், பொருளாதார விடயங்களிலேயே கவனம் செலுத்துவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதற்கு காரணம் என்ன?**

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், எமது பிரச்சினைகளுடன் நன்கு பரீட்சயமான முதிர்ந்த ஒரு தலைவர் என்ற முறையில், அவரது அனுபவம் அரசியல் விடயங்களைத் தவிர்த்து இயங்குவதற்கான செய்முறை ஒன்றை அவர் கண்டுகொண்டிருக்கலாம். இரண்டாவதாக, இனப்பிரச்சினைக்கு தென்னிலங்கை பொருளாதாரத் தீர்வுகள் ஊடாக நகர்த்துதல் என்பது அதன் கொள்கையாகவும் உத்தியாகவும் அது எப்போதுமே பின்பற்றியிருக்கின்றது.

பொருளாதார ரீதியான அணுகுமுறை அல்லது அதற்கான வாய்ப்புக்களை வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கு வழங்குவதன் ஊடாக இதற்கான தீர்வு குறித்து அல்லது அரசியல் முக்கியத்துவம் தொடர்பில் அல்லது அவர்களுடைய இருப்பு தொடர்பில் அவர்கள் காட்டுகின்ற முக்கியத்துவத்தை பெருமளவுக்கு பலவீனமான சூழலுக்குள் கொண்டு செல்வதற்கான உத்திகளும் இந்த இடத்தில் முதன்மையானவையாகவே இருந்திருக்கிறது.

பொருளாதார ரீதியான நெருக்கடிதான் உண்மையில் இலங்கையின் நெருக்கடி என்ற ஒரு பிம்பத்தை காட்டிக்கொள்வதையும் இந்த அணுகுமுறை கொண்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினை அரசியல் தளத்தில் இருந்துதான் எழுந்தது என்பதை அவர் கோடிட்டுக் காட்டத் தவறியிருந்தார். இது தெரியாத விடயமல்ல. அரசியல் ரீதியான பிரச்சினைதான் இந்தப் பொருளாதாரப் பிரச்சினைக்கான அடிப்படை என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

**தன்னுடைய கட்சியான ஐ.தே.க. வினருடன் அவர் நடத்திய சந்திப்பின் போது தற்போதைய அரசியலமைப்பின்படி தீர்வு காணப்படும் என ஜனாதிபதி கூறியிருந்தார். அது குறித்த உங்கள் பார்வை என்ன?**

ஜனாதிபதியும் அவர் சார்ந்தவர்களும் 13 ஆவது திருத்தத்துக்கு உட்பட்ட ஒரு தீர்வைத்தான் பெருமளவுக்கு வலியுறுத்துவதாகத் தெரிகின்றது. 35 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஒரு விடயத்தை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத ஒரு அரசியலமைப்பைத்தான் நாம் இலங்கையில் காண்கிறோம். இலங்கையின் அரசியல் அரசியலமைப்புக்கு வேறுபட்ட நிலையில் இயங்குகின்றது என்பதற்கு இது ஒரு உதாரணமாக இருக்கின்றது. இலங்கையின் அரசியல் பரப்பு அரசியலமைப்புக்கு முற்றிலும், வேறுபட்ட விதத்தில் இயங்குகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

ஆகவே, அரசியல் யாப்பை முன்னிறுத்துவதும் அதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும், அது தொடர்பான விடயங்களை முன்னிறுத்தி தங்களுடைய வாக்குகளை அல்லது அரசியல் இருப்புக்களை உத்தரவாதப்படுத்துவதென்பது இலங்கையில், கடந்த காலம் முழுவதுமே நாம் அனுபவித் திருக்கின்ற விடயம்தான். வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு இது புதிய விடயமல்ல. மரபார்த்த அவர்கள் குறிப்பிடுகின்ற விடயம்தான். அதாவது, இது தேர்தல் காலப்பகுதிகளில் அவர்கள் குறிப் பிடுகின்ற ஒன்றுதான்.

அரசியலமைப்புக்கு உட்பட்டதாக தீர்வு முன்வைக்கப்படும் என்பது அவர்கள் வழமையாகச் சொல்கின்ற விடயம்தான். அதாவது, அரசியலமைப்பில் உள்ள ஒரு விடயம் கடந்த 35 வருட காலமாக நடைமுறைப்படுத்தப்படாமலிருக்கின்றது என்பது முதன்மையாகப் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு அம்சம். ஒவ்வொரு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மாடுகள் செத்துக்கொண்டிருக்கும் போது





# சல்லிக்கட்டு விளையாடிய ஆளுநர்

வடகிழக்கு மாகாணம் என்பது தமிழர் தாயகம்.தமிழர்தாயகம்என்பது வெறுமனே நிலத்தினால் கட்டியமைக்கப்பட்டது அல்ல.அது தமிழர்களின் அடையாளம்,தமிழர்களின் கலை கலாசாரம்,கலாசார விழுமியங்கள், பண்பாட்டு ஒழுக்கங்களினால் கட்டமைக்கப்பட்டதே தமிழர் தேசியமும் தமிழர் தாயகமுமாகும். இதனை கேள்விக்குட்படுத்தும் பல்வேறு விடயங்கள் நடந்ததன் காரணமாகவே இந்த நாட்டில் தமிழர்கள் ஆயுதம் ஏந்தி தமது உரிமைக்காக போராட வேண்டிய நிலைமையேற்பட்டது.



இந்த விடயங்கள் சரியாக புரியப் படுமானால் தமிழர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு தமிழ் தேசியத்தினை அடைவதற்கான வழிகளை ஏற்படுத்துவார்கள் என்பது எங்களது எதிர்பார்ப்பாகவுள்ளது. இதன்காரணமாகவே இவ்வாறான வழிகளை இல்லாமல்செய்வதற்கு அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான தொடர்ச்சியானசெயற்பாடுகளைசிங்களதேசமும்அவர்களின் அடிவருடிகளும் முன்னெடுத்துவருகின்றனர்.

எவ்வாறாயினும் தமிழர்கள் தமது அடையாளத்தினையும் கலைகலாசாரம்,கலாசார விழுமியங்கள்,பண்பாட்டு ஒழுக்கங்கங்களை பாதுகாப்பதற்காக தொடர்ந்து போராடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.சிங்கள தேசம் எமது பாரம்பரியங்களை கேள்விக்குட்படுத்தும்போது எல்லாம் அதற்கு எதிராக தமிழர்கள் கிளர்ந்தெழுகின்ற நிலைமையினை நாங்கள் காணமுடியும்.

அதன்காரணமாக இன்று எங்கள் கைகளைக்கொண்டு எங்களது கண்களை குத்தும் செயற்பாடுகளைசிங்களஅரசுசெயற்படுத்துவதற்கு முனைவதை காணமுடிகின்றது.

அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற பொங்கல் விழா தொடர்பில் இன்று தமிழர் பகுதிகளில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளதை காணமுடிகின்றது. பொங்கல் விழாவானது தமிழர்கள் காலம்காலமாக முன்னெடுத்துவரும் பண்பாட்டு விழுமியங்களை மீறும் செயற்பாடுகளாக கிழக்கு தமிழர்கள் பார்க்கும் நிலைமையினை காணலாம். குறிப்பாக தமிழர்கள் ஆங்கில திகதியான தை 15அன்றே தமிழர்களுக்கு தைமாதம் பிறக்கின்றது. அன்றைய தினமே தமிழர்கள் பொங்கல் விழாவினை தொடங்குகின்றனர்.

அந்த மாதம் முழுவதும் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி, தமிழர்களின் அடையாளங்களை வெளிப்படுத்துகின்றனர். மார்கழி மாதங்களில் தமிழர்கள் எந்த நிகழ்வினையும் நடத்துவதில்லை. இது பண்டைய காலம் தொடக்கம் முன்னெடுத்துவரும் செயற்பாடாகவே பார்க்கப் படுகின்றது.



இவ்வாறான நிலையில் அந்த மரபுகளையெல்லாம் மீறிய வகையில் முன்னெடுக்கப்பட்ட பொங்கல் விழாவினை தமிழர்கள் எதிர்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தமிழர்களின் பாரம்பரிய முறைகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் மீறும் வகையிலான செயற்பாடுகளாகவே பார்க்கப்பட்டுள்ளது.

இன்று வடகிழக்கு பகுதியில் தமிழர்களை நோக்கி முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் உட்பட தமிழர்கள் மீது முன்னெடுக்கப்படும் அத்துமீறிய செயற்பாடுகளை மூடிமறைத்து தமிழர்கள் இந்த நாட்டில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றார்கள் என்பதை இந்தியாவுக்கும் சர்வதேசத்திற்கும் காட்டுவதற்கு முன்னெடுத்த முயற்சியாகவே இதனை தமிழர்கள் நோக்கும் நிலையாகவுள்ளது.

இன்று மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதியில் கால்நடை பண்ணையாளர்கள் துரத்தப்பட்டு அங்கு அத்துமீறிய

மட்டு.நகரான்

பயிர்ச்செய்கையாளர்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதேநேரம் தினமும் கால்நடைகள் சுடப்படும், கொல்லப்படும் நிலைமைகள் காணப்படுகின்றன. போராட்டம் ஆரம்பமான மூன்று மாதத்தில் சுமார் 231க்கும் அதிகமானகால்நடைகள்இழக்கப்பட்டுள்ளதுடன், ஆயிரக்கணக்கான கால்நடை பண்ணை தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினை இழந்து கஸ்ட நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

தங்களுக்கு என்றாவது விடிவு கிடைக்கும் என்ற வகையில் 120 நாட்களையும் தாண்டிய வகையில் மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் வெள்ளத்தின் மத்தியிலும் போராடிவருகின்றனர்.

இதுவரையில் 445சிங்கள அத்துமீறிய செய்கையாளர்கள் சுமார் 4500ஏக்கர் காணிகளில் அத்துமீறிய பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்களினால் மாடுகள் கொல்லப்படுதல் சம்பவம் நடைபெறுவதாகவும் மட்டக்களப்பு மாவட்ட செயலர் ஜனாதிபதி செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலும் அதனை விட அதிகமானோர் அதிகமான நிலத்தினை ஆக்கிரமித்து அத்துமீறிய பயிர்ச் செய்கையினை முன்னெடுத்துவருவதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் சிங்களவர்களினால் கால்நடைகளும் கால்நடை பண்ணையாளர்களும் கஸ்டங்களை அனுபவித்துவரும் நிலையில் ஒரு தடவையேனும் அவர்களை சென்று சந்தித்து அவர்களுக்கான தீர்வினை பெற்றுக்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பலிக்கடாவாக்குதல்

துரைசாமி நடராஜா

இலங்கையில் மலையக மக்களின் வாழ்வியல் நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்ச்சியாகவே சமூக ஆர்வலர்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எனினும் சாதக விளைவுகள் குறிப்பிடத்தக்கதாக இல்லாத நிலையில் வாக்குறுதிகளால் இச்சமூகத்தை திருப்திப்படுத்துவதையே சிலர் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

கடந்தகால மற்றும் சமகால ஆட்சியாளர்களும் இதற்கு விதிவிலக்காகி விடவில்லை. இந்நிலையில் மலையக மக்களின் பொது உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக எதிர்வரும் காலத்தில் 'மலையக தசாப்தம்' எனப்படும் பத்து வருட பல்நோக்கு கிராம மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதன் நம்பகத்தன்மையை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.



மலையக மக்களின் வரலாறு இந் நாட்டில் 200 வருடங்களாகியுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமேயாகும். எனினும் இம்மக்களின் வரலாற்றுக்கேற்ப வாழ்க்கை நிலைமைகள் அபிவிருத்தி அடைந்துள்ளனவா? என்று சிந்திக்கையில் திருப்தியற்ற வெளிப்பாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றன. மலையக சமூகத்தின் கட்டமைப்பில் சிற்சில மாறுதல்கள் இப்போது ஏற்பட்டு வருகின்றன என்பதை மறுப்பதற்கில்லை என்றபோதும் இது இன்னும் முழுமை பெறுவதாக இல்லை.

மலையக சமூகத்தின் கல்வி ஈடுபாடு மெச்சத்தக்கதாக உள்ளது. தமது பிள்ளையை கல்வி பெறச்செய்து உச்சத்துக்கு உயர்த்த வேண்டும் என்ற ரீதியில் பல பெற்றோர்கள் சிரத்தைகாட்டி வருகின்றனர். இதற்கேற்ப அண்மைக்காலமாக மாணவர்களின் கல்வி அடைவுகள் அதிகரித்துள்ளதோடு இதனூடாக பெறுபேற்று அபிவிருத்தியையும் அவதானிக்க முடிகின்றது.

மலையக இளைஞர்கள் பலர் இன்று அரசதுறை தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்டுள்ளனர். ஆசிரியர்கள் என்ற நிலையிலிருந்தும் முன்னேறி கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பலரும் இச்சமூகத்தில் உருவாகியுள்ளனர். இலங்கை நிர்வாக சேவை யிலும் எம்மவர்கள் கோலோச்சுகின்றனர். கிராம சேவை உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளிட்ட பல அரசு உத்தியோகங்களிலும் எம்மவர்கள் ஈடுபட்டு சமூகத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றனர். இவற்றைத்தவிர தனியார் தொழிற்றுறை மற்றும் வர்த்தகத்துறை என்பவற்றிலும் மலையக சமூகத்தினர் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டு வருகின்றனர்.

இவற்றோடு இம்மக்களின் குடியிருப்பு நிலைமைகளும் முன்னரைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன என்பதையும் குறிப்பிட்டாதல் வேண்டும்.தனிவீடு என்பது இவர்களில் பலருக்கு இன்னும் கனவாக இருந்து வருகின்றபோதும் இருக்கின்ற வீட்டினை நேர்த்தியாக வைத்திருக்க வேண்டும் என்பதில் இவர்களின் ஆர்வம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இன்றைய இளைஞர்கள் இதில் அதிகமாகவே ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவையெல்லாம் மலையக சமூகத்தினர் தொடர்பில் சாதகமான பக்கங்களாக காணப்பட்ட போதிலும் இதற்கு எதிரான பக்கங்களும் அதிகமாகவே காணப்படுகின்றன.நாட்டின் தேசிய வருவாய்க்கு தோள் கொடுக்கும் இம்மக்கள் இன்னும் பல தேவைகளும் நிறைவு செய்யப்படாத நிலையில் துயர வாழ்க்கை வாழ்ந்து வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும்.

கூடிய நேரம் வேலைசெய்து குறைந்தளவு ஊதியத்தை இவர்கள் பெற்றுக் கொள்ளும் நிலையில் இவர்களின் உழைப்பை உறிஞ்சி முதலாளிகள் கொளுத்திருக்கின்றனர்.இதே வேளை தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனியினர் இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளைக் கூட செய்து கொடுப்பதற்கு தயக்கம் காட்டி வருவதாக தொழிலாளர்கள் உள்ளம் குமுறுகின்றனர்.

கம்பனியை நிர்வகிக்கும் மேல்மட்ட உத்தியோகத்தர்களுக்கு அதிகளவு ஊதியம் வழங்கப்படுகின்ற நிலையில் உழைக்கும் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியத்தைப் பெற்றுக் கொடுப்பதில் கம்பனியினர் ஆர்வம் செலுத்துவதில்லை. சம்பள அதிகரிப்பு தொடர்பாக பேசப்படும் போதெல்லாம் ஆயிரம் காரணங்களை முன்வைத்து பஞ்சப்பாட்டு பாடும் கம்பனியினர் தம்மை கிள்ளுக்கீரையாக கருதுவதாகவும் தொழிலாளர்கள் மேலும் கருத்து தெரிவிக்கின்றனர். இவற்றுக்கிடையே கம்பனியினர் பிரேரிக்கும் வெளியார் உற்பத்தி முறை எந்தளவுக்கு தமக்கு சாதக விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தொடர்பாகவும் தொழிலாளர்களுக்கு சந்தேகமுள்ளது.

பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்கள் தற்போது படிப்படியாக குறைந்து வரும் நிலையில் அபிவிருத்தி என்னும் போர்வையில் இந்நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றமை குறித்தும் கண்டனங்கள் இல்லாமலில்லை. இதனிடையே மலையக மக்களின் செறிவைக் குறைத்து அவர்களை சகல துறைகளிலும் நிர்வாணப்படுத்தும் ஒரு முயற்சியே பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்களின் சுவீகரிப்பின் அடிப்படையாகும் என்று கூறுவார்களும் உளர். எவ்வாறெனினும் மலையக சமூகத்தினரின் நெருக்கீடுகள் ஒரு போதும் குறைவில்லாது தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதே கசப்பான உண்மையாகும்.



1948 ம் ஆண்டு இந்திய வம்சாவளி மக்களின் பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமை என்பன பறிக்கப்பட்ட நிலையில் பின்னர் இவற்றை மீளவும் பெற்றுக் கொள்ளும் வரை அரசியலில் இம்மக்கள் அநாதைகளாகி இருந்தனர். இவற்றை மீளவும் பெற்றுக் கொண்டதன் பின்னரே அரசியல் பிரதிநிதித்துவம் படிப்படியாக அதிகரித்தது.

இந்நிலைக்கு தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் கை கொடுத்தது என்பதும் முக்கியஸ்தர்களின் கருத்தாகும். எனவே தான் சிறுபான்மையினருக்கு நலனளிக்கும் இத் தேர்தல் முறையின் இருப்பினை தொடர்ந்தும் உறுதிப்படுத்த வேண்டும் என்று சிறுபான்மை பிரதிநிதிகள் கோசமெழுப்புகின்றனர். இதனிடையே புதிய தேர் தல் முறை ஒன்றினை அறிமுகம் செய்கின்ற போது சிறுபான்மையினரின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படாதவகையில் அது இடம் பெறவேண்டுமென்றும் வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றன.

இவற்றுக்கும் மத்தியில் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு சமத்துவமான, ஆரோக்கியம் மிக்க வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டியதன் அவசியத்தை கோபியோ அமைப்பின் இலங்கைக்கான தலைவர் குமார் நடேசன் வலியுறுத்தியுள்ளார். மேலும் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்களின் 200 ஆண்டு கால வரலாறு என்பது மிகப்பெரிய வரலாற்றுத் தடமாகும். சர்வதேசத்தின் மத்தியில் தேயிலை உற்பத்தியின் ஊடாக இலங்கைக்கு தனி இடத்தைப் பெற்றுக் கொடுத்த பெருமை இந்திய வம்சாவளி தமிழர்களைச் சாரும். 19 ம் நூற்றாண்டில் பிரித்தானிய சந்தையில் இலங்கையின் தேயிலை மிகப்பெரிய அளவில் பிரசித்தமாகியது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று வரை அடிப்படை உரிமைகளுக்காக இவர்கள் போராடி வருகின்றனர். ஒருநாட்டில் சமத்துவமான வாழ்க்கை சகலருக்கும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இந்திய வம்சாவளி மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களது அடிப்படை உரிமைகளான சொந்த நிலத்தில் தனிவீடு, தொழில் பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட விடயங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இது தொடர்பில் அவர்களுக்கு போதுமான விழிப்புணர்வையும் வழங்க வேண்டும்.

அதேநேரம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் பெருந்தோட்டங்களை பொறுப்பேற்றுள்ள கம் பனிகள் தொழிலாளர்களை சுயமரியாதையுடன் நடத்துவதை உறுதிப்படுத்த வேண்டும். தோட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்பான வழிகாட்டல்களை பயிற்சிகள் வாயிலாக புகுத்துவதன் ஊடாக தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த முடியும்.

### தேசிய நீரோட்டம்

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 10 பேர்ச் நிலத்தில் வீடமைப்பு திட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறு முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்கள் வைத்தியசாலை, பாடசாலை, விளையாட்டு மைதானம், நீர்ப்பாசனம், தபால் நிலையம் மற்றும் வீதிகள் உள்ளிட்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு சூழலில் அமைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அதேநேரம் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு என்பவற்றில் அதிக அக்கறை கொண்டு பெருந்தோட்டத் துறைவாழ் மாணவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கு அனைவரும் வழிசமைக்க வேண்டும் என்றும் குமார் நடேசன் மேலும் குறிப்பிடுகின்றார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# கனடாவில் ஒவ்வொரு தை மாதமும் தமிழர் பாரம்பரிய மாதமாக பிரகடனம்

பேராசிரியர் இ. சிறி ரஞ்சன் கனடா

கனடாவில் 400,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் வசித்து வரும் நிலையில், எதிர்கால சந்ததியினருக்காக மொழியையும்



கலாச்சாரத்தையும் பராமரிக்க வேண்டியதன் அவசியம் பலரால் உணரப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு 2003 ஆம் ஆண்டு, முதன்முறையாக ரொறன் ரோவில் அமைந்துள்ள கனடியத் தமிழ்க் கல்விக்கழகம் தமிழ் மொழி வாரத்தை ஏற்பாடு செய்தது. ஒரு பண்பாட்டின் ஆணிவேர் மொழி. ஒரு இனத்தின் மொழியை இழப்பது அந்த இனக்குழு வின் ஒற்றுமையையும் இருப்பையும் அழித்து விடும். இக்கருத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் தமிழ் மொழி வார விழா, தமிழ் மொழி வாரத்தை நடத்து வதற்கான அழைப்பாக "தமிழ் மொழியைத் தழுவுவதே தமிழர்களின் இன அடையாளத் திற்கான உயிர்நாடி" என்ற கோசத்தை பிரகடனம் செய்தது.



தமிழ் மொழி வகுப்புகள் நடத்தப் பட்ட போதிலும் போதுமான உற்சாக மான பங்கேற்பு இருக்கவில்லை. கனடாவில் பிறந்த அடுத்த தலைமுறை குழந்தைகளிடையே தமிழ் மொழியின் முக்கியத்துவத்தையும் வளமான கலாச்சாரத் தையும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மொழி வாரம் ஏற்பாடு செய்யப்பட்டது.

அடுத்தடுத்த ஆண்டுகளில், ஒவ்வொரு ஜனவரி மாதமும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே தமிழ் மரபுகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் "தமிழ் மொழி வாரம்" நடவடிக்கை எடுத்தது. நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகரித்த போது, மேலும் விரிவாக்கம் அவசியமானது. 2009 ஆம் ஆண்டின் இறுதியில் கனடாவில் தமிழ் மொழியை கற்பிக்கும் அறிவகம் என்ற அமைப்பின் ஒத்துழைப்புடன் "தமிழ் மரபு மாதம்" என்ற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டது. தமிழ் மரபு மாதக் கொண்டாட்டங்களை ஒருங்கிணைக்கவும் ஊக்குவிக்கவும் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக 'கனடியத் தமிழ் மரபு மையம்' என்ற அமைப்பு உருவாக் கப்பட்டது.

2010 ஆம் ஆண்டில், தமிழ் மொழி வாரம் தமிழ் பாரம்பரிய மாதமாக விரிவடைந்த பின்னர் முதல் தமிழ் பாரம்பரிய மாத விழா பல இடங்களில் கொண்டாடப்பட்டது. பலரது உற்சாகமான பங்கேற்புடன் தமிழ் பாரம்பரிய மாதத்தின் மீதான ஆர்வம் அதிகரித்ததால், தமிழர்களுக்கு அப்பாற்பட்ட பரந்த சமூகத்தினரிடையே தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான முறையான பிரகடனத்துடன் பரவலான அங்கீகாரத்தைப் பெற வேண்டிய அவசியம் உணரப்பட்டது. ஒன்றாறியோ மாகாணத்தின் மார்க்கம், அஜாக்ஸ் மற்றும் பிக்கரிங் நகரங்களில் 2012 ஆம் ஆண்டில் பிராம்ப்டன் மற்றும் 2013 ஆம் ஆண்டில் ரொறன்ரோ நகரங்களில் தை மாதம் தமிழ் மரபு மாதமாகபிரகடனப்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் ஒட்டாவா நகரம் ஜனவரியை தமிழ் பாரம்பரிய மாதமாக அறிவித்தது. 2014 ஆம் ஆண்டில் ஒன்றாறியோ மாகாண அரசாங்கம் ஜனவரி மாதத்தை தமிழ் பாரம்பரிய மாதமாக பிரகடனப்படுத்தி அதற்கு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்கும் சட்டமூலத்தை நிறைவேற்றியது. 2016 ஆம் ஆண்டில், கனடா அரசாங்கம் ஒவ்வொரு ஜனவரியையும் தமிழ் பாரம்பரிய மாதமாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சட்டத்தை இயற்றியது, இது கனடா முழுவதும் ஒவ்வொரு ஜனவரியையும் தமிழ் பாரம்பரிய மாதமாக கொண்டாட வழிவகுத்தது.

2019 ஆம் ஆண்டில், தமிழ் பாரம்பரிய மாதத்தின் போது, "தமிழியல்: இன்றும் எதிர் காலத்திலும்" என்ற தொனிப்பொருளில் முதல் உலகத் தமிழ் மாநாடு ரொறன்ரோவில் நடை



பெற்றது. இந்த மாநாட்டில் தாயகம் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர். கனடியத் தமிழ்க் கல்விக்கழகம், அறிவகம் மற்றும் கனடியத் தமிழர் தேசியஅவை ஆகியவற்றுடன் இணைந்து இந்த மாபெரும் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

• • •

# சூரியனைத் தொட்டுப் பார்க்கவிருக்கின்ற

# நாஸாவின் விண்வெளிப் பயணம்

தமிழில்: ஜெயந்திரன்

விண்வெளி ஆய்வு தொடர்பான நிகழ்வுகளை உற்றுநோக்கும் போது, இந்த நிகழ்வு ஒரு புதிய வரலாற்றைப் பதிவுசெய்யவிருக்கிறது. சரியாக ஒரு வருடத்துக்குப் பின்னர், டிசம்பர் 24ம் திகதி, அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் தயாரிப்பான பாக்கர் சூரிய ஆய்வு (Parker Solar Probe), ஒரு செக்கனுக்கு 195 கிலோ மீற்றர் என்ற பிரமிக்கத்தக்க வேகத்தில், சூரியனைக் கடந்து செல்லும் நிகழ்வு நடைபெறவிருக்கிறது.



மனிதனின் ஆக்கத்தில் உருவான எந்தப் பொருளுமே, அதுவரை அந்தளவு வேகமாகப் பயணித்திருக்காது. அதுமட்டுமன்றி பூமியிலிருந்து 6.1 கிலோ மீற்றர் அல்லது 3.8 மில்லியன் மைல்கள் தொலைவில் உள்ள அந்த நட்சத்திரத்துக்கு அண்மையில் போயிருக்காது.


"உண்மையில் நாங்கள் ஒரு நட்சத்திரத்தில் தரையிறங்கவிருக்கிறோம்" என்று பாக்கர் திட்டத்தின் விஞ்ஞானியான நூர் றவுவாபி (Nour Raouafi) தெரிவித்தார். "மானிட குலத்தைப் பொறுத்தவரையில், வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படக்கூடிய ஒரு சாதனையாக இந்த நிகழ்வு அமையப் போகிறது. இது 1969ம் ஆண்டில் மனிதன் சந்திரனில் காலடி வைத்ததற்கு ஒப்பான ஒரு நிகழ்வாகும்" என்று ஜோண் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில், பயன்பாட்டு இயற்பியல் ஆய்வுகூட விஞ்ஞானியான (Applied Physics Laboratory Scientist) அவர் பிபிசி ஊடகத்துக்குக் கருத்துத் தெரிவித்தார்.

சூரியனை நோக்கி பாக்கர் விண்கலம் விழுகின்ற போது, ஏற்படுகின்ற ஈர்ப்பு விசையே இந்த அசுர வேகத்துக்கான காரணமாகும். நியூயோக்கிலிருந்து இலண்டனுக்கு 30 செக்கனில் பயணம் செய்வதற்கு ஒப்பாக இது இருக்கும்.



அமெரிக்க விண்வெளி நிறுவனத்தின் இந்த பாக்கர் சூரிய ஆய்வுத் திட்டம், அந்த நிறுவனம் வடிவமைத்த மிகத் துணிச்சலான திட்டங்களில் ஒன்றாகும். 2018ம் ஆண்டு, ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் இலக்கு, சூரியனை மிக அருகாக பல தடவைகள் கடப்பதாகும். அதன் கடைசியான இத்திட்டம், பாக்கர் விண்கலம் சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயான தூரத்தின் 4 வீதத்தில் மட்டுமே பயணிக்கும்.

பாக்கர் விண்கலம், இந்தச் செயற்பாட்டில் ஈடுபடும் போது, அதற்கு மிகப்பெரியதொரு சவால் காத்திருக்கிறது. பூமி சூரியனைச் சுற்றி வருகின்ற போது இரண்டுக்கும் இடையே ஆகக்குறைந்த தூரம் வருகின்ற நிகழ்வு, 'பெரிஹெலியோன்' (Perihelion) என அழைக்கப்படுகிறது. அவ்வாறான ஒரு நிகழ்வு ஏற்படும் போது, விண்கலத்தின் முன் பகுதியின் வெப்பநிலை 1400 சென்ரிகிரேட் ஆக இருக்கும். சூரியனை மிகவும் விரைவாக அணுகுவதும், விரைவாக அதன் சுற்றுப்புறத்தை விட்டு வெளியேறுவதுமாக பாக்கரின் அணுகுமுறை அமைந்திருக்கும். மிகவும் தடிப்பான முறையில் அமைக்கப்பட்ட ஒரு பாதுகாப்பில் பொருத்தப்பட்ட கருவிகள் விண்கலம் பயணம் செய்யும் சுற்றுச்சூழலை அளவிடும் பல கருவிகளைக் கொண்டிருக்கும். சூரியனது முதன்மையான செயற்பாடுகள் தொடர்பாக இதுவரை பெற்றுக்கொள்ளப்படாத புத்தம் புதிய அறிவைப் பெற்றுக்கொள்வதே இதற்கான வெகுமதியாக இருக்கும்.



இவற்றுள் முதன்மையானது சூரியனது வெளிமேற்பரப்பான கொறோணாவின் (Corona) செயற்பாடுகளைப் புரிந்துகொள்வதாக இருக்கும்.

பாக்கர் விண்கலம் இந்தக் கொறோணாவிலே தான் தங்கியிருக்கும். ஒரு முழுமையான சூரியக் கிரகணத்தின் போது தான் இந்தக் கொறோணாவை பூமியிலிருந்து எங்களால் பார்க்கக்கூடியதாகவிருக்கும்.

எமது உள்ளுணர்வுக்கு எதிரான வகையில், சூரியனைச் சுற்றியிருக்கின்ற இந்தக் கொறோணா, மிகவும் அதிகமான வெப்பத்துக்கு உள்ளாகும். சூரியனது ஒளிக்கோளம் அதாவது அதன் மேற்பரப்பில் அதன் வெப்பநிலை கிட்டத்தட்ட 6000 பாகை சென்ரிகிரேட் ஆகும். ஆனால் இந்தக் கொறோணாவுக்குள் அதன் வெப்பநிலை பல மில்லியன்கள் சென்ரிகிரேட்டை எட்டலாம். சூரியனின் நடுவிலுள்ள கருவிலிருந்து தூரம் செல்லச்செல்ல, அதன் வெப்பநிலை குறையும் என்று நாம் எதிர்பார்ப்போம். அத்துடன் கொறோணா என்று அழைக்கப்படும் இந்தப் பிரதேசத்தில் மின்னேற்றப்பட்ட எலக்ரோன், புறொட்டோன், மற்றும் அயன் துணிக்கைகளின் வேகம் சடுதியாக அதிகரிக்க அவை செக்கனுக்கு 400 கிலோ மீற்றர் மிகையொலி வேகத்தில் பயணம் செய்யும்.

விஞ்ஞானிகளால் இந்த நிகழ்வை முழுமையாக விளங்கப்படுத்த முடியாது. ஆனால் சூரியனின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விண்வெளி காலநிலை தொடர்பாகவும் எதிர்வு கூறுவதற்கு இவை முக்கியமானவை.

கடைசியாகக் குறிப்பிடப்பட்ட நிகழ்வு, உண்மையில், துணிக்கைகள் பலமாக வெடித்துச் சிதறுவதையும், அத்துடன் சூரியனிலிருந்து வெளிக்கிழம்பும் காந்தப்புலங்கள், பூமியில் நடைபெறும் தொடர்பாடல் செயற்பாடுகளில் கணிசமான பாதிப்புகளை ஏற்படுத் தக்கூடியவை என்பதுடன் மின்சக்தியை விநியோகம் செய்யும் கட்டமைப்புகளின் தொழிற் பாடுகளையும் பாதிக்கக்கூடியவை. அங்கு ஏற்படக்கூடிய கதிர்வீச்சுகள் விண்வெளி வீரர்களின் ஆரோக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை.

"பெண்களையும் ஆண்களையும் இணைத்து விண்வெளிக்கு அனுப்பவும் விண்வெளியில் நிரந்தரமான பிரசன்னத்தை ஏற்படுத்தவும், இப்போது நாங்கள் சிந்தித்து வருவதனால், இது ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுகிறது" என்று ராவுவாவி மேலும் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை, சூரியனுக்கு மிகவும் அருகாக பாக்கர் விண்கலம் சென்றது. மேலும் மூன்று தடவைகள் அவ்வாறான பயணங்கள் திட்டமிடப்பட்டிருக்கின்றன. அதன் பின்னர் அது நவம்பர் 6ம் திகதி வீனஸ் கிரகத்தைச் சுற்றித் திரும்பி, தனது வட்டவடிவ பயணப்பாதையை வளைத்து, டிசம்பர் 24ம் திகதி ஒரு வரலாற்று நிகழ்வைப் படைக்க இருக்கிறது.

நாஸா அமைப்பில், விஞ்ஞானக் குழுவுக்குத் தலைமை வகிப்பவர் முனைவர் நிக்கி பொக்ஸ் (Dr.Nicky Fox). தனது தற்போதைய பணியைப் பொறுப்பேற்க முன்னர் அவரே பாக்கர் விண்கலத்துக்கான முன்னணி விஞ்ஞானியாகக் கடமையாற்றினார்.

24ம் திகதி மேற்கொள்ளப்படவிருக்கின்ற பறப்பின் முக்கிய பலம் என்னவென்றால், முன்னர் எப்போதும் நடைபெறாத வகையில் சூரியனில் கொறோணாப் பகுதியில் பாக்கர் அதிக நேரம் தரிக்கவிருக்கிறது. "அங்கே உண்மையில் நாங்கள் என்னத்தைக் காணப் போகிறோம் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சூரியக் காற்றில் உள்ள வெப்பமாக்கல் தொடர்பான அலைகளை நாங்கள் அங்கு தேடுவோம்" என்று அவர் பிபிசிக்குத் தெரிவித்தார். பல வேறுபாடான அலைகளை அங்கு நாங்கள் காணப்போகிறோம். பல வருடங்கள் விஞ்ஞானிகள் விவாதித்து வரும் கலப்பு தொழிற்பாடுகளை அங்கு நாங்கள் காணுவோம்.



நடப்பு வருடம், பாக்கரின் விண்வெளிப் பயணத்தின் சிகரமாக அமையப் போகிறது. டிசம்பரிலே தான் அது சூரியனுக்கு மிகவும் நெருக்கமாகச் செல்லும். ஏனென்றால் அதன் பயணப்பாதை வீனஸைச்சுற்றி அதைவிட நெருக்கமாகத் திரும்பும் வாய்ப்பு இல்லை.

சூரியனுக்கு அதைவிட நெருக்கமாகச் சென்றால் பாக்கரின் பெரிய பாதுகாப்புக் கேடயத்தின் நிழலை அது சிறியதாக்கி விண்கலத்தின் பின்புறம் தாங்கமுடியாத அளவு வெப்பம் அதன் மேல் படுவதற்கு வழிசமைக்கும்.

நன்றி: பிபிசி.கொம்

# அமெரிக்காவை தோற்கடித்த இந்திய – சீன – ரஷ்ய கூட்டணி

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

கடந்த ஞாயிற்றுக்கிழமை(7) பங்களாதேசத்தில் இடம்பெற்ற தேர்தலில் தற்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா 5வது தடவை பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட பங்களா தேஸ் தேசிய கட்சி இறுதி நேரத்தில் தேர்தலை புறக்கணித்தபோதும், தேர்தல் நடைபெற்று முடிவும் அறிவிக்கப்பட்டுவிட்டது. தேர்தல் முடிவுகள் வந்த சில மணிநேரத்தில் இந்தியா, சீனா, ரஸ்யா நாடுகளின் பிரதிநிதிகள் வரிசையாகச் சென்று ஹசினாவை வாழ்த்தியுள்ளனர்.



இந்த வருடம் உலகில் 64 நாடுகளில் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் இந்தியா, அமெரிக்கா ரஸ்யா, பங்களாதேசம், இலங்கை, தாய்வான் மற்றும் பாகிஸ்த்தான் என்பவை முக்கியமானவை. ஆனால் அதில் நடந்த முதலாவது தேர்தல் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்திற்கு பாதகமாகவே அமைந்துள்ளது.

இந்து சமுத்திரத்திற்கும் பசுபிக் சமுத்திரத்திற்கும் இடையிலான தொடர்புகளை கொண்டுள்ள வங்காளாவிரிகுடா இந்தோ-பசுபிக் சமுத்திரத்தின் பூகோள அரசியலில் முக்கியத்து வமிக்கது. கிழக்கு ஆசியாவுக்கான வர்த்தகத்தின் பிரதான பாதையும் அதுவே.

தனது முக்கியத்துவத்தை உணர்ந்த பங்களாதேசம் எந்த சக்திகளுடனும் அணிசேராது தனித்தே நிற்கின்றது. ஆனால் அதனை தன்பக்கம் இழுப்பதற்கு அமெரிக்கா பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

2022 ஆம் ஆண்டின் தகவல்களின் அடிப்படையில் பங்களாதேசத்தின் வர்த்தக கூட்டணியில் அமெரிக்கா மூன்றாவது இடத்தில் உள்ளது. பங்களாதேசம் போன்ற சிறிய நாடுகளை நாம் புறக்கணிக்க முடியாது என அமெரிக்காவின் பாதுகாப்புச் சபையும் அண்மையில் தீர்மானம் கொண்டுவந்திருந்தது.




அமெரிக்காவுடன் இணைந்து பங்களா தேசத்தை தன்பக்கம் இழுப்பதற்கு யப்பானும் அமெரிக்காவுக்கு தனது உதவிகளை வழங்கியிருந்தது. மதார்பரி பகுதியில் ஆழ்கடல் துறைமுகத்தையும் அது நிர்மாணிக்க உதவியது(Bay of Bengal Industrial Growth Belt). பயங்கரவாத தடுப்பு, பாதுகாப்பு போன்ற துறைகளிலும் யப்பானும் அமெரிக்காவும் உதவ முன்வந்தன.

எனினும் சீனாவின் வர்த்தக மற்றும் பொருளாதார உதவிகளை பங்களதேசத்தால் புறக்கணிக்க முடியாத நிலை மெல்ல மெல்ல உருவாகியது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் எறத்தாள 20 பில்லியன் டொலர்கள், 31 விகித இறக்குமதிகள் சீனாவில் இருந்தே வருகின்றன.

பங்களாதேசத்து படையினருக்கான பிரதான ஆயுத விநியோகஸ்த்தர் சீனா தான். 97 விகிதமான பங்களாதேசத்தின் பொருட்களுக்கு வரிவிலக்கும் சீனா அளித்துள்ளது.

சீனாவுடனான இந்த உறவுகளை முறியடிப்பதற்கு அமெரிக்கா ஒரு ஆட்சி மாற்றத்தை விரும்பியது. வழமைபோல மனித உரிமை மீறல்கள், சுயாதீனத்தன்மையற்ற தேர்தல் என்ற கோசங்களை அமெரிக்காவும் அது சார்ந்த மேற்குலக மனித உரிமை அமைப்புக்களும் வலியுறுத்த ஆரம்பித்தன.

அதில் முக்கிய திருப்பமாக அமைந்தது பத்மா நதிக்கான அணை மற்றும் பாலம் கட்டுவதில் பிரதமர் ஹசினா தலைமையிலான அரசு பாரிய ஊழல்களில் ஈடுபட்டதாக உலகவங்கி 2012 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை தான்.

அதனை தன் மீதான சேறடிப்பாக கருதிய பிரதமர் சீனாவிடம் இருந்து நிதியை பெற்று மீதமுள்ள திட்டத்தை முடித்துவிட்டார். 3.6 பில்லியன் டொலர்கள் செலவில் 2022 ஆம் ஆண்டு நிறைவுபெற்ற இந்த திட்டத்தின் மூலம் தலைநகர் டாக்காவுடன் 21 மாநிலங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

அதன்முலம் சீனாவுக்கும் பங்களாதேசத்திற்கும் இடையிலான நெருக்கங்கள் அதிகரித்தன. இந்தியாவும் சில அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தாலும், சீனா தான் பிரதான பங்கு வகித்தது. மேற்குலகம் மெல்ல மெல்ல காணாமல் போனது. சீனாவின் திட்டங்கள் மலிவானது என்பதும் ஒரு



அனுகூலம்.

2016 ஆம் ஆண்டு பங்களாதேசம் Belt and Road Initiative (BRI) திட்டத்தில் இணைந்து கொண்டது. தொடருந்துசாலைகள், எரிசகத்தி திட்டம், துறைமுகங்கள் என சீனாவின் 17 அபிவிருதித் திட்டங்களில் பிரதமரின் அவாமி லீக் அரசு இணைந்து கொண்டது. 2015 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டுவரையிலும் 75 விகிதமான ஆயுத இறக்குமதியை சீனாவிடம் இருந்தே மேற்கொண்டது.

ஆனால் மறுவளமாக அமெரிக்காவின் பிடி இறுகியது. அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் கொள்கை ஹசினா அரசுக்கு எதிராக மாறியது. மனி உரிமை மீறல்கள் நல்லாட்சி போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். 2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனநாயக நாடுகளுக்கான கூட்டத்துக்கு பங்களாதேசம் அழைக்கப்படவில்லை. அப்போது பங்களாதேசத்துக்கான சீன தூதுவர் உதவிகளை வழங்கியிருந்தார்.

அதனை தொடர்ந்து கடந்த வருடம் ஜோகன்ஸ்பேர்க்கில் இடம்பெற்ற பிறிக்ஸ் நாடுகளின் கூட்டத்திற்கு சென்ற ஹசினா சீன அதிபர் சி ஜின்பினை சந்தித்தார். வெளிநாடுகளின் தலையீடுகளை முறியடிப்பதில் சீனா உதவும் என சீனா அதிபர் வாக்குறுதி வழங்கினார். அமெரிக்காவின் அழுத்தங்களை தவிர்க்க சீனா உதவும் எனவும் கூறினார்.

பைடன் அரசு இந்தோ- பசுபிக் கொள்கைகளை வகுத்தபோது அதில் இணைய வேண்டாம் எனவும், குவாட் அமைப்பில் சேரவேண்டாம் எனவும் சீனா தெரிவித்தது. அதனை பங்களாதேசம் பின்பற்றியது. தாய்வான் பிரச்சினை தொடர்பிலும் பங்களாதேசம் சீனாவின் கொள்கைகளைத்தான் ஆதரிக்கின்றது.



1.2 பில்லியன் டொலர்கள் செலவில் கொக்ஸ் பசார் பகுதியில் சீனா நீர்மூழ்கித்தளம் (BNS Sheikh Hasina) ஒன்றை அமைத்தது இந்தியாவுக்கு அதிர்ச்சியை கொடுத்தது. எனினும் சீனா தமது பொருளாதார நட்பு நாடு என்று கூறி பங்களாதேசம் அதனை சமாளித்துவிட்டது.

சீனா அமைத்துள்ள வீதிகள் மற்றும் துறைமுகங்களால் இந்தியாவும் நன்மை அடைகின்றது என Imtiaz Ahmed (Professor at the Department of International Relations at Dhaka University) தெரிவித்துள்ளார். அந்த பாதைகளை பயன்படுத்தி இந்தியா தனது பிரதான நிலப்பகுதியில் இருந்து பொருட்களை வடகிழக்கு இந்தியாவுக்கு நகர்த்துகின்றது என



அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இலங்கையை போல சீனாவின் கடன் பொறிக்குள் பங்களாதேசமும் வீழ்ந்துவிடும் என்ற குற்றச்சாட்டுக்களும் உண்டு. ஆனால் அதனை மறுக்கின்றார் ஜகன்கீர் நாகர் பல்கலைக்கழகத்தின் அனைத்துலக உறவுகளுக்கான திணைக்களத்தைச் சேர்ந்த பேராசிரியர் கசாப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பயணமும், தலைமைப் பண்பும்!

பேராசிரியர்
**ஆ. அருள் இனியன்**

இங்கு எல்லோருக்கும், தாங்கள் ஒரு தலைமையாக இருக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. இது ஆண் பெண் பாலின வேறுபாடின்றி மனித இயல்பாகவே உள்ளது. அதை தன்முனைப்பு என்ற இழிவான சொல்லில் மட்டம் தட்டுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. அவரவர் எல்லைக்கு உட்பட்டு, தங்களை முதன்மைப்படுத்திக் கொள்ளவும், முன்னிலைப்படுத்திக் கொள்ளவும் எல்லோரும் விரும்புவது இயல்பே!

உலகை அச்சுறுத்தும் யூத இனம் *'be a boss or be with the boss'* என்ற கொள்கைப்படியே இன்று உலகை ஆள்கிறது. ஒன்று அவர்கள் ஆள்வார்கள் அல்லது ஆள்பவர்களைக் கட்டுப்படுத்தும் உயரத்தில் இருப்பர். இதுவே இன்று இந்தியாவைக் கட்டுப்படுத்தும் பிராமணர்களுக்கும் பொருந்தும். எனில், தமிழர்கள் மட்டும் ஏன் தலைமை ஏற்க தயங்க வேண்டும்?

சரி, தலைமையாக இருக்க அல்லது தலைமைப் பீடத்தில் உள்ளவர்களைக் கட்டுப் படுத்த, என்னென்ன தகுதிகள்?

இந்தக் கேள்வியை தமிழ்நாட்டிற்கு வெளியில் கேட்டால் பல்வேறு பதில்கள் வரும். குறிப்பாக, அறிவு, நிர்வாகத் திறமை, பணம் போன்றவை முதன்மைக் காரணிகளாக முன்வைக்கப்படும். ஆனால், அதேக் கேள்வியை தமிழ்நாட்டில் உள்ளவர்களிடம் கேட்டால் அவர்க ளின் பொதுவான பதில் என்னவாக இருக்கின்றது?

நல்லா பேச வேண்டும் அல்லது நல்லா நடிக்க வேண்டும் அல்லது நல்லா எழுத வேண்டும்.

சரி, இவைகளா ஒரு தலைமைக்கு தலை யாயத் தகுதி? நல்லா பேசினால் தலைவன் ஆக



முடியும் என்றால் ஏன் TR என்று சொல்லப்படும் நடிகர் T. ராஜேந்திரன் ஒரு நல்லத் தலைவனாக முடியவில்லை. அவர் நன்றாக பேசுவார். திமுக கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளராக இருந்து, பிறகு தனிக் கட்சித் தொடங்கினார். ஆனால், ஒரு தலைசிறந்த தலைவராக வர முடியவில்லையே..! சிவாஜி கணேசன் நல்ல நடிகர். ஆனால் ஒரு தலைவனாக தோற்றுப்



போனார்.

எனில், எழுதுவது, பேசுவது, நடிப்பது போன்ற தனித்திறமைகள் எல்லாம் ஒருவன் தலைசிறந்த தலைவனாக இருப்பதற்கான முதன் மையானத் தகுதிகள் இல்லை. ஒருவேளை அவை துணைக் காரணிகளாக அமையலாம்.

முதன்மையான காரணிகள் பல இருப்பினும், அவற்றுள் மிக முக்கியமாக ஒரு தலைவனிடம் இருக்க வேண்டியவை நிர்வாக அறிவு, சட்ட அறிவு, வரலாற்று அறிவு, சமூக இயங்கியல் குறித்தான புரிதல், மக்களை தொடர்ந்து அணுகி அவர்களின் சுக, துக்கங்களில் பங்கு கொள்வது போன்றவையே.

மாவோவின் சிறப்புமிக்க வரிகளான "மக்களிடமே செல்.. மக்களோடு வாழ்.." என்பதுதான் எக்காலத்திற்கும் பொருந்தும் தலைமைக்கு அடிப்படையானக் கூற்று. எனில், 'மக்களிடம் செல்..' என்பதை இன்னும் ஆழமாக பார்ப்போம் எனில், அது பயணத்தின் முக்கியத்துவத்தையே உணர்த்தும்.

நீங்கள் ஒரு நிர்வாகத்தில் அல்லது ஒரு அமைப்பில் அல்லது இயக்கத்தில் ஒரு சிறந்த தலைவராக, தலைமைப் பண்பு கொண்டவராக வர வேண்டும் என்று எண்ணுகிறீர்களா?

**எப்பொழுதும் புதிய பயணத்திற்கு தயாராக இருங்கள்...**

**எப்பொழுதும் புதிய மனிதர்களை சந்தித்துக் கொண்டே இருங்கள்...**

புதிய பயணமும், புதிய மனிதர்களும் தான் நீங்கள் ஆகச் சிறந்த தலைமையாக மாற உதவும் சக்திகள். உங்களின் பயண எல்லையும், நீங்கள் கண்டடைந்த புதிய மனிதர்களின் எண்ணிக்கையும் தான் உங்களின் உயரத்தை தீர்மானிக்கிறது...

பயணத்தை தொடங்குங்கள்...

• • •

## பண்பாட்டு ... தொடர்ச்சி ...

செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய குடப் புலவியனார்

*அடுபோர் செழிய! இகழாது வல்லே
நிலன்தெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்மஇவண் தட்டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே!*

ஏன பெரும்போர்களை முன்னெடுக்கும் ஆற்றல் படைத்த பாண்டியன் நெடுஞ்செழியனே! என் சொல்லை அலட்சியப்படுத்தாது. மேடுபள்ளங்கள் உடைய நிலங்களில் மழை நீரைப் பேணிட ஊருணிகள், குளங்கள், நீரோடைகள், ஆறுகள், அமைத்தவர்களே தங்கள் புகழ் மரணத்தால் மறையாது தடுத்து நிறுத்தியவர்கள். அவ்வாறு செய்யத் தவறுபவர்கள் மரணத்துள் மறைந்து புகழை இழப்பர். என உணவு உற்பத்திக்கு நீர்நிலை அமைத்து நீர் முகாமைத்துவம் செய்ய வேண்டுமென் நீரை மூலதாரமாகக் கொண்டு வாழ்வை அமைத்து நீர்ப்பாசனத்தின் மூலம் எந்த நிலத்தையும் வளமாக்கி அதில் மனித உழைப்பைப் பயன்படுத்தி உணவுற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற இந்தத் தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டின் புறநிலை வெளிப்பாடே தைப் பொங்கல்.

பௌத்தம் தமிழரின் வாழ்வியலை முன்னிறுத்தியே தனது தானம் என்கின்ற கொடைமுறைமையைத் தொடங்கிற்று என்பதற்கு உதாரணமாக முதல் தமிழ் பௌத்த இலக்கியமான மணிமேகலைசங்கஇலக்கியத்துக்குடபுலவியனார் நீர்நிலை அமைத்து உணவுப்பாதுகாப்பு அளிக்கும் கோட்பாட்டின் வழி மக்களின் அழிபசி அழிக்கும் கோட்பாடாக

*"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றாமாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!*

எனச் சங்கத் தமிழர் வாழ்வியல் தத்துவமான உணவு வழங்கல் உயிர் வளர்த்தல் என்ற உணவுப் பாதுகாப்புத் தத்துவம் சீத்தலைச் சாத்தனார் மூலம் பௌத்த விழுமியமாக மடைமாற்றம் செய்யப்பட்டது. இதனை இன்று பௌத்தம் தங் களுடையதே என விதண்டாவாதம் செய்யும் சிங்கள பௌத்த பேரினவாதிகள் ஆழமாகப் படிக்க வேண்டும்.

இந்த 2024 பொங்கல் தமிழரின் விவசாய நிலங்களும் மேய்ச்சல் புற்றரைகளும் கடலும் சிறிலங்காவால் படைபல துணையுடன் பௌத்த விகாரைகளை அமைப்பதன் மூலம் சிங்களக் குடியேற்றங்களுக்கான காணிகளாக உருமாற்றம் செய்யப்படும் காலத்தில் இடம்பெறுகிறது.

இவற்றைத் தடுத்து நிலத்தைப் பேணி எங்கள் விவசாயப் பெருமக்கள் மகிழ்ச்சியாகப் பொங்கி உண்டு சாப்பிடும் காலத்தை உருவாக்க தாயகத்திலும் உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் உறுதி எடுத்து பொங்கலோ பொங்கல் எங்கள் மண்ணினதும் மக்களதும் விடுதலை உணர்வு பொங்கியெழவே பொங்கலோ பொங்கல் என ஒன்றிணைந்து கூவி மகிழ்ந்து இந்த ஆண்டு தைப்பொங்கலைக் கொண்டாடி மகிழ்வோம். இது பண்பாட்டு மீட்டுணர்வு மூலம் மீளவும் எமது மண்ணின் இறைமையை மீள்வித்துப் பாதுகாக்கும் பண்பாட்டுப் பேரெழுச்சியாக எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மீளவும் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்து கூறி மகிழ்கின்றேன்.

• • •

## நாடி பிடித்து ... தொடர்ச்சி ...

தேர்தல் காலங்களிலும் ஜனாதிபதிகள் அல்லது ஜனாதிபதி வேட்பாளர்கள் முதன்மைப்படுத்து கின்ற ஒரு அம்சமாக இதனை நாம் நோக்க வேண்டியிருக்கின்றது.

**13 ஆவது திருத்தம் தொடர்பாக குறிப் பிட்டிருந்தீர்கள். ஜனாதிபதியும் கடந்த வருடத்திலேயே அதனைக் குறிப் பிட்டிருந்தார். அதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் அவசியம் என்றும் அவர் தெரிவித்திருந்தார். பாராளுமன்ற அங்கீகாரம் இதற்கு உண் மையில் தேவைதானா?**

உண்மையில் போலியான ஒரு அரசியல் விம்பத்தை ஏற்படுத்துவதற்கான செய்முறை தான் இவை. இந்த 13 ஆவது திருத்தம் 1987 இல் நடைமுறைப்படுத்தக்கூடிய ஒன்றாக பாராளு மன்றத்தின் அங்கீகாரத்துடன் அதன் பிரயோகம் காணப்பட்டது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம். அது அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயமும் கூட. இப்போது அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று சொல்வது, அதனை இல்லாமல் செய்வதற்கான ஒரு செயல்முறையாகவே தோன்றுகின்றது.

இது வெறுமனே இலங்கையுடன் சம்பந் தப்பட்டதாக இல்லாமல், இந்தியாவுடன் தொடர்புபட்ட ஒன்றாகவும் இருப்பது இதன் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிப்பதாகவும் இருக்கின்றது.

• • •

## பலிக்கடா ... தொடர்ச்சி ...

இதேவேளை இலங்கையில் ஒரு தனித்துவம் மிக்க சமூகமாக, நாட்டின் தேசிய வருவாயில் கணிசமான வகிபாகத்தினைக் கொண்டவர்களாக இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் விளங்குகின்றார்கள். எனவே இலங்கை அரசாங்கத்தினால் தேசிய ரீதியில் உருவாக்கப்படும் ஆணைக்குழுக்கள், பேரவைகளில் இந்திய வம்சாவளி தமிழர்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமாக இடம்பெற வேண்டுமென சமத்துவம் மற்றும் உள்ளடக்கமான வளர்ச்சியை நோக்கிய நகர்வு இலங்கையில் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் 200 வருடங்கள் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட சர்வதேச மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இம்மாநாடு அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மலையக மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள் அநேகமுள்ளன. தொழில்வாய்ப்பு, உட்கட்டமைப்பு மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளும் அநேகமாகும்.இவற்றிலிருந்தும் இவர்கள் விடுபட்டு தேசிய நீரோட்டத்தில் சங்கமிப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியமாகும். இதனை காலம் தாழ்த்தாது உடனடியாக மேற்கொள்ளுதலும் வேண்டும். எனினும் இது தொடர்பான முன்னெடுப்புக்கள் திருப்திகரமானதாக இல்லை. அரசாங்கத்தின் வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலும், தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இம்மக்களின் வாழ்வில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு வாக்குறுதிகள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் இது குறித்த சாதக விளைவுகள் குறைவாகவே இருந்து வருகின்றன.

இதேவேளை ஏற்கனவே மலையக மக்களின் மேம்பாட்டினை கருத்தில் கொண்டு ஐந்தாண்டுத் திட்டம், பத்தாண்டுத் திட்டம் என்றெல்லாம் திட்டங்களின் முன்வைப்புக்கள் இடம்பெற்றன.எனினும் காலப்போக்கில் இவையெல்லாம் கிடப்பில் போடப்பட்டு, ஏட்டுச் சுரைக்காயாகிப் போனது கடந்தகால வரலாறாகவுள்ளது. இத்திட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் அரசியல்வாதிகள் வழங்கிய அழுத்தங்களும் செல்லாக்காசாகிப் போனதையே அவதானிக்க முடிந்தது.

ஆட்சியாளர்கள் அவ்வப்போது தமக்கென ஒரு நிகழ்ச்சி நிரலை வைத்துக் கொண்டு அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு பொய் வாக்குறுதிகளை வழங்கி அவர்களின் ஆதரவை பெற்றுக் கொண்டவரலாறுகளுக்கு குறைவில்லை. இது இப்போதும் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றது. இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் பல சந்தர்ப்பங்களிலே பலிக்கடாவாக்கப்பட்டிருக்கின்றார்கள். இதய சுத்தியுடன் செயற்படும் இம்மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருவதென்பது கொடுமையிலும் கொடுமையாகும்.

இதனிடையே மலையக மக்களின் பொது உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 'மலையக தசாப்தம்' எனப்படும் பத்து வருட பல்நோக்கு கிராம மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருக்கின்றார். காலனித்துவ ஆட்சியின்போது ஏற்பட்ட பின்னடைவுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மலையக பிரதேசங்களில் பொது உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில் போதுமான வளர்ச்சி ஏற்படவில்லை. மலையக பிரதேசங்களில் பெரும்பான்மையினராக தமிழர்கள் வாழுகின்றனர்.

வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார அபிவிருத்தி, கிராமப்புற அபிவிருத்தி மற்றும் ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் உட்பட பல அபிவிருத்தி திட்டங்களை ஒன்றிணைத்து மேற்கொள்வதன் மூலம் அப்பிரதேச மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு விரைவான மற்றும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையை அரசாங்கம் மேற்கொள்வது தமது எதிர்பார்ப்பாகும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசாங்கம் 2024 க்கான வரவு செலவு திட்டத்தில் மலையக தசாப்தத்தின் பத்தாண்டு பல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி திட்டத்துக்காக 10,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, களுத்துறை, பதுளை மற்றும் குருநாகல் உள்ளிட்ட பத்து மாவட்டங்களில் உள்ள 89 பிரதேச செயலக பிரிவுகளில் மலையக தசாப்தம் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. அமைச்சரவை அங்கீகாரத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர்களுக்கு திட்டத்தேர்வு அளவுகோல் மற்றும் செயற்பாட்டு மாதிரி குறித்து தெரிவிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்துக்கான பிரதேச மற்றும் மாவட்ட குழுக்களின் இணக்கப்பாடு கிடைத்தவுடன், மாவட்ட செயலாளர்களின் பூரண ஈடுபாட்டுடனும் ஏனைய அரச நிறுவனங்களுடனும் மற்றும் பிரதேச அலுவலகத்தின் பூரண ஆதரவுடனும் கூட்டு வேலைத்திட்டமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசதரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றமையும் நோக்கத்தக்கதாகும். இந்த வருடம் தேர்தல் காலம் என்ற நிலையில் இந்த வாக்குறுதிகள் தேர்தலை மையப்படுத்திய வாக்குறுதிகளாக இருப்பதற்கும் அதிகளவில் சாத்தியமுள்ளது.

எது எவ்வாறானபோதும் நாட்டிற்கு முதுகெலும்பாய் விளங்கும் மலையக சமூகத்தினரை கிள்ளுக் கீரையாக நினைப்பதோ அல்லது அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்காது தொடர்ந்தும் அச்சமூகத்தை ஏமாற்றுவதோ ஒரு பிழையான அணுகுமுறையாகும். இது பாதக விளைவுகள் பலவற்றுக்கும் அடித்தளமாகும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே இதனைவிடுத்து அம்மக்களுக்கு தேவையான உரிமைகளை உரியவாறு வழங்குவதற்கு ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். இதேவேளை மலையக அரசியல்வாதிகளின் பொதுநோக்கை மையப்படுத்திய ஒன்றிணைந்த அழுத்தம் சாதக விளைவுகள் பலவற்றுக்கும் உந்துசக்தியாகும் என்பதையும் மறந்துவிடலாகாது.

• • •

## தாய்வான் போர் ... தொடர்ச்சி ...

சீனா படை நடவடிக்கை மூலம் முறியடிக்கும் என சீனா தெரிவித்துள்ளது.

தாய்வான் சீனாவுடன் இணைக்கப்படும் என புதுவருட உரையிலும் சீனா அதிபர் தெரிவித்துள்ளார். செமிகொண்டக்ரர் எனப்படும் இலத்திரனியல் பொருட்களை உற்பத்தி செய்வலதில் தாய்வான் முன்னியில் உள்ளது. கணினிகள், தொலைபேசிகள் மற்றும் மின்சக்தியில் இயங்கும் வாகனங்கள், ஆயுதங்கள் போன்வற்றிற்கு அது முக்கியமானது. அது முக்கியமான கடல்வழிப் பாதையுமாகும்.

இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன ஒன்று ஒரு வருடத்திற்கு தாய்வான் கடல் பாதையை சீனா மூடலாம், அது உலக பொருளாதாரத்தில் 5 விகித வீழ்ச்சியை ஏற்படுத்தும், இரண்டாவது சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான முழு அளவிலான போர் இது இரண்டு மடங்கு இழப்பை ஏற்படுத்தலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செந்தில் தொண் ... தொடர்ச்சி ...

வரவேற்பளிக்கப்பட்டது.

தமிழக முதல்வர் கௌரவ மு.க.ஸ்டாலின் தலைமையில், கடந்த வியாழக்கிழமை(11) மற்றும் வெள்ளிக்கிழமை(12) நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில், இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், டுபாய், இலண்டன், கனடா, மொரிசியஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இந்தியா சென்றடைந்த கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரை, தமிழக அமைச்சர் மாண்புமிகு செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் நேரடியாகச் சென்று வரவேற்றார்.

"அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் சிறப்புரையாற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களிடம் ... தொடர்ச்சி ...

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே கடந்த திங்கட்கிழமை திருகோணமலை புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்பு புகையிரத நிலையம் நோக்கி செல்லும் விரைவு புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது.

அதாவது மிலேனியம் சலஞ் என்ற உடன்பாட்டில் திருமலையில் இருந்து கொழும்புவரை அமெரிக்கா செய்ய திட்டமிட்டதை தற்போது இந்தியா செய்து வருகின்றது.

ஆனால் அதில் தமிழர்களுக்கான அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதுதான் கவனிக்கத்தக்கது. இந்தப்பெரிய விழாவை தனியாக தொண்டமானால் செய்திருக்க முடியாது. நிதி உதவி, தயாரிப்பு அனைத்தும் இந்தியாவில் இருந்து திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கூட இந்தளவு ஒரு பெரிய பொங்கல் விழா நடந்ததில்லை என்கிறார் தமிழகத்தை சேர்ந்த நண்பர். ஆக மொத்தத்தில் திருமலையை இலங்கை இழந்துள்ளது ஆனால் அது தமிழர்களிடம் இல்லை என்பது தான் கவனிக்கத்தக்கது.

## மாலைதீவுடன் ... தொடர்ச்சி ...

மாலைதீவுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல்கள்ஏற்பட்டுள்ளநிலையில்இந்த பயணம் அமைந்துள்ளது. தனது நாட்டின் இறைமைக்கு இந்தியா பாதகமாக உள்ளதாக மாலைதீவின் புதிய அதிபர் குற்றம் சுமத்தியிருந்ததுடன், அங்கிருந்த இந்திய படையினரையும் வெளியேற்றியிருந்தார்.

உட்கட்டுமானம், காலைநிலைமாற்றம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் பல உடன்பாடுகள் இரு நாடுகளுக்குமிடையில் எட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாலைதீவின் பொருளாதார வளர்ச்சியில் சீனாவின் பங்களிப்பு முகியமானது எனவும், இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் தமக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் எனவும் மாலைதீவு அதிபர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கு சீனா 1.37 பில்லியன் டொலர்களையும், சவுதி அரேபியா 124 மில்லியன் டொலர்களையும் மற்றும் இந்தியா 123 மில்லியன் டொலர்களையும் கடனாக வழங்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழர்கள் பகுதி ... தொடர்ச்சி ...

கொடுக்கும் முகமாக கிழக்கு மாகாண ஆளுனர் பொங்கல் விழாவினையும் ஜல்லிக்கட்டினையும் நடாத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள் குறித்து பல்வேறு சந்தேகங்களை தமிழர்கள் எழுப்பி வருகின்றனர்.

கிழக்கில் தமிழர்களின் குரல்களை மழுங்கடிக்கசெய்வதற்கான நடவடிக்கையாக கூட இருக்கலாம் என்ற கருத்துகளும் பல்வேறு வழிகளிலும் வெளிப்படுத்தப்பட்டுவருகின்றன.

அண்மையில் கிழக்கு மாகாண ஆளுனரின் ஜல்லிக்கட்டு மற்றும் பொங்கல் விழா தொடர்பில் மட்டக்களப்பில் உள்ள கல்விமான் ஒருவர் தனது முகப்புத்தக்கத்தில் இவ்வாறு எழுதியிருந்தார்:-

“பொங்கல் என்பது பானையில் அரிசியையும் பாலையும் ஊற்றிச் செய்யும் ஒரு சமையல் நிகழ்வல்ல. அதற்குப் பின்னால் ஒரு பாரம்பரியம், இனத்துவ அடையாளம் போன்றவை உள்ளன.

பாரம்பரியம் எனும்போது உழவுத் தொழில் அதன் பின்னால் உள்ள விடயங்கள் என்று வரும். உழவுத்தொழிலில் மாடுகள் பிரிக்க முடியாத அம்சமாக உள்ளது. மயிலத்தமடுவில் மாடுகளுக்கு நிகழ்த்தப்படுகிற அநியாயங்களை விளங்காமல் சல்லிக்கட்டு அறிமுகப் படுத்துகிறேன், புல்லுக்கட்டு அள்ளிப்போடுகிறேன் என்று நிற்பது அரைஞாண்கொடி இல்லாமல் கச்சைகட்டுகிற விளையாட்டுத்தான்.

மாடு என்பது தமிழர்களின் இனத்துவ அடையாளம். மயிலத்தமடுவில் மாட்டுக்கு வைக் கப்படும் கத்தியானது இனத்தை அவமானப் படுத்தும் செயல். இனத்துவ மோதலாக அவன் செய்யும்போது மறுபுறத்தில் எதுவுமே நடக்காதது போல இனத்தை அடையாளப்படுத்தும் ஜல்லிக் கட்டையும், பொங்கலையும் பேருக்கு செய்வதற்கு இவர்களுக்கு முடிகிறதே.

என்னை இப்படிச் செய் என்று யாராவது சொன்னால் என்னால் முடியாது. ஒருபக்கத்தில் மாட்டைப் பலிகொடுத்த ஒரு விவசாயி அழுதுகொண்டிருக்கும்போது மறுபக்கத்தில் மாட்டைக்கொண்டாடும் சல்லிக்கட்டும், விவசாயியைக் கொண்டாடும் பொங்கலும் கொண்டாடுவதற்கு என்னால் முடியாது. அதற்காக சாதாரண மக்கள் தங்கள் வீடுகளில் பொங்கல் கொண்டாடக் கூடாதா? என்று கேட்டால் அதுவேறு, இதுவேறு.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய இடத்தில் உள்ளவர், பாதிக்கப்படும் மாடுகளைக் காக்கவேண்டியவர் இங்கு மாடுகள் செத்துக் கொண்டிருக்கும் போது சல்லிக்கட்டு விளையாட்டு நடத்துவது. தாய்-தகப்பனுக்கு சோறுபோடாதவன் முதியோர் இல்லத்தில் அவர்களது பிறந்தநாளை எல்லோருக்கும் சோறுபோட்டு கொண்டாடுவது போன்றுதான் உள்ளது.

எனது அம்மப்பா ஒரு பட்டிக்காரன் அவர் மாடுகளுடன் எப்படி அன்போடு இருப்பார் என்பது எனக்குத் தெரியும். மாட்டிற்கு வருத்தம் என்றால் அவர் சாப்பிடமாட்டார். இங்கு மாகாணத்தில் ஒருபக்கத்தில் மாடுகள் சுட்டும், வெட்டியும் கொல்லப்படுகின்றன.இந்த நிலையில் சல்லிக்கட்டு தேவையா?”என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான பல்வேறுபட்ட கருத்துகளை முகப்புத்தகங்கள் ஊடாக காணமுடிகின்றது. தமிழர்களின் அடையாளங்களை அழித்துவிட்டு தமிழர்களுக்கான நிகழ்வுகளை நடாத்துவதினால் எந்த பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

கிழக்கு மாகாண ஆளுனர் கிழக்கில் தமிழர்களின் கலைகலாசாரம்,பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கவேண்டும் என்று தனித்து நின்று முடிவு எடுப்பாரானால் அவர் முதலில் செய்யவேண்டியது மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களின் பிரச்சினைக்கான தீர்வினை வழங்கவேண்டும்.அங்குள்ள சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்கள் அகற்றப்பட்டு பண்ணையாளர்களின் நிலங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். இதுவே அனைவரது எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

• • •

## செங்கடல்... தொடர்ச்சி ...

அதிகரிக்க, வான் பாதுகாப்பு அமைப்பு அவசியம். குறிப்பிட்ட ரோந்து மண்டலங்களை அடையாளம் காணுதல், எரிபொருள் விநியோகங்களைப் பாதுகாத்தல் மற்றும் வெளிநாட்டு கடற்படைகளுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் ஆகியவை ஒரு கப்பலை நிலைநிறுத்துவதற்கு முன் இன்றியமையாத கூறுகளாகும்” என்று கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

செங்கடலில் இலங்கை கடற்படைக் கப்பலை அனுப்பினால் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை 250 மில்லியன் ரூபாய் செலவாகும் என்று ஜனாதிபதி கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பொருளாதாரத்தின் தற்போதைய மந்தநிலையின் பின்னணியில் இது உண்மையில் விலை அதிகம். ஆனால், உலக வர்த்தகத்தைச் சார்ந்துள்ள இலங்கை ஒரு ஆயுதக் குழுவின் அடாவடிகளைக் கண்டும் காணாமலும் இருக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### வர்த்தகத்துக்கு இடையூறுகள்

செங்கடலில் பதற்ற நிலை உருவாகியுள்ளதையடுத்து MSC, Hapag-Loyd, CMA CGM Group மற்றும் Maersk உள்ளிட்ட சரக்கு நிறுவனங்கள் செங்கடலில் இருந்து வெளியேறியுள்ளன. அவர்களின் கப்பல்கள் இப்போது கேப் ஆஃப் குட் ஹோப்பைச் சுற்றி வருகின்றன, அதாவது கூடுதலாக 4,000 மைல்கள் பயணம் செய்கின்றன.

தளவாட தொழில்நுட்ப நிறுவனமான ஃப்ளெக்ஸ்போர்ட் வழங்கிய பகுப்பாய்வு நிலவரப்படி, உலகளாவிய கொள்கலன் திறனில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்ட 389 கொள்கலன் கப்பல்கள் ஏற்கனவே சூயஸ் கால்வாயில் இருந்து திசைமாறிவிட்டன அல்லது அவ்வாறு செய்யும் நிர்ப்பந்தத்தில் உள்ளன. இது அனைவருக்கும் அதிக செலவுகளை ஏற்படுத்தும்.

இதனால், இலங்கையும் மிக அதிகமாக பாதிக்கப்படும். அதன் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 60% ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவிற்கு (33% ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் 25% அமெரிக்காவிற்கும்) மற்றும் இவை செங்கடல் வழியாக செல்கின்றன.

2022 ஆம் ஆண்டில், இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 3.31 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்து 1.06 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இறக்குமதி செய்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கான மொத்த ஏற்றுமதி மதிப்பு 3.3 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும், அமெரிக்காவில் இருந்து மொத்த இறக்குமதி 393.72 மில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் இருந்தது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இலங்கை வர்த்தக உபரியை கொண்டுள்ளது. ஆனால் செங்கடல் போன்ற ஒரு மூச்சுத் திணறல் புள்ளியில் கப்பல் கற்பழிப்பிலிருந்து ஹூதிகள் தப்பிக்க அனுமதிக்கப்பட்டால், இந்த சாதகமான வர்த்தக நிலைமை மோசமாக மாறக்கூடும்.

### ரணிலின் முயற்சிக்கு ஆதரவு தெரிவிப்பு

“செங்கடலுக்கு கடற்படைக் கப்பலை அனுப்பும் ஜனாதிபதியின் முடிவை நான் முழுமையாக ஆமோதிக்கிறேன்” என கொழும்பு ஷிப்பர்ஸ் அகாடமியின் நிறுவனரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொஹான் மஸ்கரோலா தெரிவித்தார்.

“உலக வர்த்தகத்தை சீர்குலைக்கும் பயங்கரவாதத்தை அனுமதிக்க முடியாது. இலட்சக் கணக்கான மக்களின் வாழ்வாதாரம் சார்ந்திருக்கும் உலக வர்த்தகத்தின் வழியில் கருத்தியல் சாதகங்கள் தடையாக இருக்கக் கூடாது” என்று அவர் மேலும் கூறினார்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பாலஸ்தீனிய காரணத்திற்கான அனுதாபம் ஒரு மூர்க்கமான கிளர்ச்சி அமைப்பின் செயல்களை மன்னிக்க வழிவகுக்கக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். இலங்கை கப்பல் ஒன்றை அனுப்புவது மட்டும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகிவிடுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி! ஆனால், கப்பல் ஒன்றை அனுப்புவதன் மூலமாக மேற்கு நாடுகளின் நன்மதிப்பைப் பெறுவதன் மூலமான நலன்களைத்தான் இலங்கை நம்பியிருப்பதாகவே தெரிகின்றது.

• • •

## அமெரிக்காவை... தொடர்ச்சி ...

ஏனம்கான், அதாவது இங்கு செலவுகளை விட அந்த திட்டங்களால் வரும் வருமானம் அதிகம், எனவே அது எப்படி கடன் சுமையாகும்? பங்களாதேசத்தின் 72 பில்லியன் டொலர்கள் கடனில் 18 பில்லியனை உலகவங்கியும், 13 பில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கியும், 9 பில்லியனை யப்பானும், 5 பில்லியனை ரஸ்யாவும், 4.8 பில்லியனை சீனாவும் 1 பில்லியனை இந்தியாவும் கொண்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் 2021 ஆம் ஆண்டு பங்களாதேசத்தின் விரைவு நடவடிக்கை பற்றலியன் படை மீது அமெரிக்கா தடைகளை கொண்டுவந்திருந்தது. பின்னர் தேர்தல்களில் முறைகேடுகளை மேற்கொள்பவர்கள் மீது பயணத்தடை கொண்டுவரப் போவதாக அமெரிக்கா கடந்த வருடம் மிரட்டியது. ஆனால் சீனா தேர்தல் தொடர்பில் எந்த அழுத்தத்தையும் பிரதமர் மீது பிரயோகிக்கிவில்லை.

அதேசமயம் அமெரிக்காவின் அழுத்தத்தை இந்தியாவும் விரும்பவில்லை, அமெரிக்காவின் அதிக அழுத்தம் பங்களாதேசத்தை மேலும் எம்மைவிட்டு விலக வைக்கலாம், சீனா பக்கம் சாயவைக்கலாம் என இந்தியா அமெரிக்காவை எச்சரித்தது.

பங்களாதேசத்தின் எதிர்க்கட்சிக்கு பாகிஸ்தானின் ஆதரவுகள் உண்டு என்பது இந்தியாவின் அச்சம். எனவே அதனை பயன்படுத்தி தனக்கான ஆபத்தை அமெரிக்கா கொண்டுவரும் என இந்தியா அஞ்சியது. காலிஸ்த்தான் அமைப்பினருக்கு அமெரிக்கா பாதுகாப்பு அளிப்பதும் இந்தியாவுக்கு அச்சத்தையே தருகின்றது.

எனவே தான் சீனா, இந்தியா, ரஸ்யா என்ற கூட்டமைப்பு அமெரிக்காவை பங்களாதேசத்தின் தேர்தலில் தோற்கடித்துவிட்டது. இந்த வருடத்தின் முதலாவது பூகோள அரசியல் தோல்வியை அமெரிக்கா சந்தித்துள்ளது. அடுத்தது அவர்களின் போட்டிக்களம் இலங்கை நோக்கி திருப்பலாம்.

• • •

## பொருளாதார ... தொடர்ச்சி ...

90 விகிதமான மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். ஆனால் அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் மெறி இனமக்களே அதிகம் பங்கெடுக்கின்றனர்.

கடந்த மே மாதம் முதல் அங்கு இடம்பெற்றுவரும் வன்முறைகளில் இதுவரை 180 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்னர். பெருமளவான வர்த்தக நிலையங்கள் மற்றும் வதிவிடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. பணவிக்கம் 12 விகிதமாக அதிகரித்துள்ளது. இணையத்தள வசதிகள் பல நாட்களாக முடக்கப் படுவதால் வியாபாரங்கள் அதிகளவு பாதிப்பு படைந்துள்ளன.

தினமும் 40,000 ரூபாய்களுக்கு பழங்களை விற்பனை செய்யும் நான் தற்போது 4000 ரூபாய்களுக்கே விற்பனை செய்வதாக பழங்களை விற்பனை செய்யும் பெண் ஒருவர் தெரிவித்துள்ளார். பல வியாபார நிலையங்கள் 70 விகிதமான வர்த்தகத்தை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.